ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை மானேஜர்கள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

வருட சந்தா ரூ. 3.] [தனிப் பிரதி அணா 4

மலர் 20 } பிப்ரவரி 1959 { இதழ் 2

அவர்களை மட்டுமல்ல! இவர்களையும் கேளுங்கள்!!

பழைய கதை—புதிய நிலை

“இதோ கிழக்குப் பக்கமாகப் போகிறதே இது ஒரு வழி. அதோ மேற்குத் திசையில் செல்கிறதே, அது மற்றோர் வழி. இந்த இரண்டு வழிகளிலே எந்த வழியை வேண்டுமானாலும் நீ தேர்ந்தெடுத்துக்கொள். உனக்கு முழு உரிமை உண்டு. ஆமாம், எந்த வழியில் போக விரும்புகிறாய் நீ? கிழக்குப் பாதையிலா?”

கேட்டார் பெரியவர். சிறுவனோ மிரள மிரள விழித்தான். ஏனென்றால் இரண்டு வழிகளுமே பயங்கரமான காடுகள் நிறைந்தவை. இரண்டு வழிகளிலே எந்த வழியில் சென்றாலும் ஆபத்து ஏராளம். உயிரோடு மீள்வது கடினம்.' அறிவான் அவன். ஆகவே தான் என்ன விடை கூறுவது என்பதை அறியாமல் விழித்தபடி நின்றான்.

"ஏன் நிற்கிறாய் வீணாக? எந்த வழி உனக்குப் பிடித்த வழி? கூறு விரைவில்! மேற்கா, கிழக்கா?"—பெரியவர் வினவினார் மறுபடியும்.

"மேற்குப் பாதையில் உள்ள காட்டிலே சீறிப் பாயும் சிறுத்தைகள் ஏராளமாமே, எப்படிச் செல்வது நான் அந்த வழியிலே?"—பயந்து பயந்து கூறினான் சிறுவன்.

"அப்படியானால் கிழக்குப் பாதையில் செல்ல விருப்பமா?"—பெரியவர் கேட்டார்.

"அம்மாடியோ! கிழக்குப் பாதையா? வேண்டவே வேண்டாம்! உயிரைப் பறிக்கும் வேங்கைகள் நிறைய உள்ள பகுதியாமே அது!"—சிறுவன் இயம்பினான்.

"அப்படியெல்லாம் பேசினால் நடக்காது தம்பி! இந்த இரண்டு பாதைகளிலே ஏதாவது ஒரு பாதையைத்தான் நீ தேர்ந்தெடுத்தாக வேண்டும். ஆமாம்—வேறு வழி கிடையாது—அனுமதிக்கமாட்டேன்—மூன்றாவது பாதை எதிலேயும் உன்னைப் புகவிட மாட்டேன்" கண்டிப்பாகக் கூறினார் பெரியவர்.

சிறுவனுக்கோ ஏதும் புரியவில்லை. காட்டப்பட்ட வழிகள் இரண்டும் பேராபத்து நிறைந்தவை. வேறு வழியில் செல்லவோ அனுமதி இல்லை. என்ன செய்வான் அவன்? "சரி சரி! அப்படியானால் நான் எந்த வழியிலுமே செல்லவில்லை. இந்த இடத்திலேயே உட்கார்ந்து விடுகிறேன்" என்று கூறியபடி, பேசிக்கொண்டிருந்த இடத்திலேயே உட்கார்ந்து விட்டான்.

தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள், உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளைப்பற்றி இரண்டோர் மாதங்களுக்கு முன்னால் பிறப்பித்த உத்தரவைக் கண்டதும் இந்தக் கதைதான் நம் உள்ளத்தின்முன் வந்து நின்றது.

"உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் அளித்துவரும் உதவித் தொகை தொடர்ந்து தரப்படவேண்டுமானால், அந்தப் பள்ளிக்கூடங்கள் எல்லாம், இனி மாணவர்களிடமிருந்து கட்டணமே வசூலிக்காமல் நடத்தப்படவேண்டும். அப்படியில்லாமல் கட்டணம் வசூலித்துத்தான் நடத்துவது என்கிற முடிவுக்கு நிர்வாகிகள் வருவார்களானால், தாராளமாக அப்படியே நடத்தட்டும். ஆனால் அத்தகைய பள்ளிக்கூடங்களுக்கு அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை எதுவுமே கிடைக்காது" என்கிற பொருள் படைத்ததாக அமைந்திருக்கிறது அல்லவா அரசாங்க உத்தரவு? அந்த உத்தரவும், மேலே குறிப்பிடப்பட்டுள்ள கதையில் வரும் பெரியவரின் கட்டளை

யும் ஏறத்தாழ ஒரே தன்மை படைத்தனவாகத்தானே இருக்கின்றன! ஆகையால்தான் இந்த உத்தரவைக் கண்டதும் அந்தக் கதை நம் மனக் கண்முன் நிழலாடத் தொடங்கியது.

இரண்டு வழிகளும் ஆகா வழிகளே !

மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்காமல், தற்போது அரசாங்கத்தார் அளித்து வருகிற உதவித் தொகையை மட்டுமே வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்த முடியுமா என்றால், நிச்சயமாக முடியாது. ஏன் முடியாது என்றால், தற்போது அரசாங்கத்தார் அளித்து வருகிற உதவித் தொகை, பள்ளிக்கூடத்தை நடத்துவதற்காக ஆகும் செலவில் மிகச் சிறிய அளவுதான் இருக்கும். ஆசிரியர் ஊதிய உதவித் தொகை (Teaching grant) என்கிற பெயரால் ஆட்சியாளர்கள் அளிக்கிற உதவித் தொகைகள் அவ்வளவும், அப்படியே ஆசிரியர்களுக்குத் தரப்பட்டுவிடுகின்றன. அந்தத் தொகையிலிருந்து ஒரே ஒரு புதிய காசைக்கூடப் பள்ளிக்கூடச் செலவுக்காக எடுத்துக்கொள்ள முடியாது. மேற்படி உதவித் தொகையில் 15 சதவிகிதத்துக்கு மேற்படாத மற்றோர் உதவித் தொகையை, நிர்வாக உதவித் தொகை (Management grant) என்கிற பெயரால் ஆட்சியாளர்கள் அளித்து வருகிறார்கள்.

ஆசிரியர்களுக்கு நிர்வாகிகள் அளிக்கிற அதிகப்படி ஊதியம்,

ஆசிரியர்களுடைய நல்வாழ்வு நிதிக்கு (Provident fund) நிர்வாகிகள் செலுத்தவேண்டிய பங்கு,

பள்ளிக்கூடக் கட்டிடத்திற்கான வாடகை,

மேற்படி கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கும் சுண்ணாம்பு அடிப்பதற்கும் ஆகும் செலவு,

ஆயாக்கள் — தோட்டிகள் — கட்டிடத்தைப் பெருக்கித் துப்புரவு செய்பவர்கள்—பியூன்கள் ஆகியவர்களுக்குத் தரப்படவேண்டிய ஊதியம்,

நாற்காலி, மேசை, கரும்பலகை, பெஞ்சு, வெண் சுண்ணத் துண்டுகள், நாட்டுப் படம் முதலியவற்றை வாங்குவதற்கான தொகை,

ஆகிய இத்தனைச் செலவுகளையும் நிர்வாக உதவித் தொகை என்கிற அந்த மிகச் சிறிய உதவியை வைத்துக்கொண்டு சரிக்கட்டுவது ஒரு நாளும் இயலாத செயல்.

அப்படியானால் மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்துக் கொண்டு-ஆனால் அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை எதையுமே

எதிர்பாராமல் பள்ளிக்கூடத்தை நடத்தலாமே—அதற்கென்ன தடை என்று யாராவது கேட்கக்கூடும். அப்படி யாராவது கேட்பார்களானால் அவர்கள் உண்மை நிலையை உணராதவர்கள் என்றுதான் கூறவேண்டும். ஏனென்றால், ஆசிரியர்கள் ஊதியம் உட்பட எல்லாச் செலவுகளையும் மாணவர்களின் கட்டணத்திலிருந்தே சரிக்கட்ட வேண்டுமென்றால், மாணவர்களின் கட்டணம் மிக உயர்ந்த அளவில் அமைக்கப்படவேண்டும். ஆனால் அப்படி அமைக்கப்பட்டால் பெரும்பாலான மாணவர்களின் பெற்றோர்களால் தங்கள் பிள்ளைகளைப் படிக்க வைக்க முடியாது. மிகச் சில மாணவர்களே அத்தகைய நிலையில் பள்ளிக்கு வருவார்கள். அவர்களை மட்டும் வைத்துக் கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்த முடியாது.

ஆகையால்தான் அரசாங்கத்தார் அறிவித்துள்ள இரண்டு வழிகளில், எந்த வழியில் சென்றாலும் பள்ளிகளை நடத்த இயலாது—மூன்றாவது வழி ஒன்று தேவை—அந்த வழி, பள்ளிச் செலவுக்குத் தேவையான முழுத் தொகையையும் நிர்வாகிகளுக்குத் தேடித் தருவதாக அமைந்திருக்கவேண்டும் என்று நாம் பல முறை எடுத்தெடுத்துக் கூறியிருக்கிறோம்.

சங்கத்தார் காட்டும் சிறந்த பாதை

“உதவி பெறும் பள்ளிக்கூடங்கள் தொடர்ந்து நடைபெற வேண்டுமானால், அரசாங்கத்தார், இப்போது தந்து வருகிற ஆசிரியர் ஊதிய உதவித் தொகையைத் தொடர்ந்து தந்து வருவதோடு, முதல் வகுப்புக்கு அணா 8, இரண்டாம் வகுப்புக்கு அணா 10, மூன்றாம் வகுப்புக்கு அணா 12, நான்காம் வகுப்புக்கு அணா 14, ஐந்தாம் வகுப்புக்கு ரூபா 1 என்கிற முறையில் எல்லாப் பிள்ளைகளுக்கும் நஷ்ட ஈடு தரவேண்டும்” என்று, சென்னை நகர உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் நிறைவேற்றியுள்ள தீர்மானத்தை நாம் முழு மனதுடன் ஆதரித்துப் பாராட்டியதற்குக் காரணமும் இதுதான். நிர்வாகிகள் சங்கத்தாரின் இந்தத் தீர்மானத்தை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டால் இப்போது ஏற்பட்டுள்ள எல்லாச் சிக்கல்களும் தீர்ந்துவிடும் என்பது நம்முடைய அழுத்தந் திருத்தமான கருத்து. நிர்வாகிகள் சங்கம் சுட்டிக் காட்டியுள்ள இந்தப் பாதையே சிறந்த பாதை—சீர்மிகு முறையில் ஆரம்பக் கல்வியை அழைத்துச் செல்ல வல்ல அரிய பாதை—ஆசிரியர்களுக்கும் மாணவர்களுக்கும் பெற்றோர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் ஒரே நேரத்தில் வசதியை அளிக்கும் ஆற்றல் படைத்த அழகிய பாதை என்பதில் நமக்கு ஒரு துளியும் ஐயமில்லை.

ஆனால் இப்படியெல்லாம் உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் பணத்தை அள்ளிக் கொடுப்பதை விட அந்தப் பள்ளிகள் யாவற்றையும் அரசாங்கத்தாரே எடுத்து நடத்தினால் என்ன—அல்லது நகராட்சி மன்றங்களிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைத்தால் என்ன என்று ஒரு சிலர், சிற்சில சமயங்களில் எண்ணமிடுவதாகத் தெரிகிறது. அப்படிச் செய்வதால் ஏற்படக்கூடிய விளைவுகள் அத்தனையையும் ஆர அமர இருந்து சிந்தித்துப் பார்த்தால் அத்தகைய ஆபத்தான முடிவுக்கு அவர்கள் வரவே மாட்டார்கள்.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளை அரசாங்கத்தார் அல்லது நகராட்சி மன்றத்தார் எடுத்து நடத்தினால், இப்போது அந்தப் பள்ளிகளால் ஆட்சியாளர்களுக்கு ஏற்படும் செலவைவிட இரண்டு அல்லது மூன்று மடங்கு செலவு, அப்போது ஏற்படும். இது மறுக்கமுடியாத உண்மையாகும்,

இந்த உண்மையை, உண்மைதான் என்று ஏற்றுக்கொள்ள யாருக்காவது தயக்கமாக இருக்குமானால், அவர்கள், தற்போது நகராட்சி மன்றங்களால் நடத்தப்பட்டுவரும் ஆரம்பப் பள்ளிகளில் ஏற்படும் சராசரி செலவு எவ்வளவு — உதவிபெறும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் அளித்துவரும் சராசரி உதவித் தொகை எவ்வளவு என்பதை ஒன்றோடு ஒன்றை ஒப்பிட்டுப் பார்க்கட்டும். அப்படிப் பார்த்தால், நாம் கூறுவது முற்றிலும் உண்மை என்பதை அவர்களே ஏற்றுக்கொள்வார்கள்.

அரசாங்கத்தாரே பள்ளிக்கூடங்களை நடத்த முயன்றால், செலவு அதிகமாகும் என்பது மட்டுமல்ல; அப்படி அதிகமாகக் கூடிய செலவை ஏற்கக் கூடிய நிதி வசதி தற்போது அரசாங்கத்திடம் இல்லை. அடுத்த பத்து அல்லது பதினைந்து ஆண்டுகள் வரையில் அத்தகைய வசதி அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடும் என்று நம்புவதற்குக்கூட வழி ஏதும் இதுபோது இல்லை.

செலவோ, வளரும் !
தர்மோ, குறையும் !!

அரசாங்கத்தார் அல்லது நகராட்சி மன்றத்தார் பள்ளிக்கூடங்களை நடத்துவதால் செலவு வளரும் என்பது மட்டுமல்ல, அளிக்கப்படுகிற கல்வியின் தரமும் மட்டமாகி விடும் என்பது நாடறிந்த உண்மை. **"ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் மொத்தத்தில் கல்விப் போதனையின் தரம் குறைவாகத்தான் இருக்கிறது. அதை உயர்த்துவதில் சர்க்கார் கவனம் செலுத்துவதுதான் அவசரமான விஷயம். எய்டெட் பள்ளிகள்**

பெரும்பாலானவற்றில் போதனையின் தரம் உயர்ந்து காணப் படுகிறது. அவற்றை எடுத்து விட்டு, ஸ்தல ஸ்தாபனங்கள் அல்லது சர்க்காரின் பொறுப்பாக்கிவிட்டால், எல்லாப் பள்ளிக் கூடங்களிலும் போதனை அடி மட்டத்துக்கு வந்துவிடும்," என்று "தினமணி" பத்திரிகையானது அதனுடைய 13-2-59 இதழின் தலையங்கத்தில் திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறது. "தினமணி" இதழின் இந்தக் கருத்தை ஆரம்பக் கல்வி பற்றிய விவரங்களைத் தெளிவாக அறிந்த நல்லறிவாளர்கள் அத்தனைப் பேரும் ஏற்றுக் கொள்கிறார்கள் என்பதை, யார்தானாகட்டும், எப்படி மறுத்துவிட முடியும்?

அரசாங்கத்தாரே எல்லாப் பள்ளிகளையும் நடத்துகிற நிலை மக்களாட்சிக் கோட்பாட்டிற்கு முற்றிலும் முரணானதாகும்; அப்படி ஒரு நிலை ஏற்படுமானால், கல்வித் துறையில் அரசாங்கத்தின் தலையீடு, விரும்பத்தகாத அளவுக்கு வளர்ந்து விடும். குறிப்பிட்ட நேரத்தில் எந்தக் கட்சியின் ஆட்சி நாட்டில் அமைந்துள்ளதோ அந்தக் கட்சிக்கு ஏற்ற முறையில் எழுதப்பட்டுள்ள புத்தகங்களே பாட புத்தகங்களாக அமைக்கப்படலாம். அந்தக் கட்சிக்கு "ஆமாம்" போடுகிற "அருமையான" உள்ளம் படைத்தவர்கள் மட்டுமே ஆசிரியர்களாக அமர்த்தப்படக்கூடும். அந்தக் கட்சி மாறி, வேறோர் கட்சி ஆளும் கட்சியாக அமர்ந்ததும், பழைய புத்தகங்களும் ஆசிரியர்களும் அகற்றப்பட்டு, புதிய கட்சிக்கு ஏற்ற புத்தகங்களும் ஆசிரியர்களும் அமர்த்தப்படக்கூடும். இவற்றால் எல்லாம், பள்ளிக்கூடங்கள் கல்வி நிலையங்களாகக் காட்சிதரும் உயரிய நிலை அகன்று, அரசியல் கட்சிகளின் போட்டா போட்டிச் சண்டைக்குரிய நிலைக்களன்களாக மாறிவிட நேரும். இத்தகைய நிலையில் அளிக்கப்படும் கல்வியின் தரம் எத்தகையதாக இருக்கும் என்பதை இயம்பவும் வேண்டுமோ? ஆளும் கட்சியின் கொள்கைகளையும் தலைவர்களையும் பாராட்டிப் புகழும் தன்மை படைத்த நூல்களையே பாட புத்தகங்களாக்கி, மக்களின் சிந்தனைச் சுதந்தரத்தைப் பறித்தெடுத்து, ஜனநாயகத் தத்துவத்துக்குப் பேராபத்தை ஏற்படுத்தக் கூடிய இந்த நிலை, நம் அருமைத் தமிழ் நாட்டில் ஏற்படக்கூடாத நிலை என்பதை எவரும் மறுக்க முடியாது.

அரசாங்கத்தாரே பள்ளிகளை நடத்துவதால் ஏற்படக்கூடிய இந்த விளைவுகள் எல்லாவற்றையும் தெள்ளத் தெளிவாக அறிந்திருக்கிற காரணத்தால்தான், இங்கிலாந்து — அமெரிக்கா போன்ற பிற நாடுகளில் எல்லாம், அரசாங்கங்கள், தனியார் நடத்தும் பள்ளிகளைத் தாங்களே எடுத்துக் கொள்வது என்கிற தவறான பாதையை ஏறெடுத்தும் பார்ப்பது கிடையாது. ஆனால் அதே நேரத்தில் அந்தப் பள்ளிகளை நடத்துவதற்குத் தேவையான பண உதவியை மிகமிகத்

தாராளமான முறையில் அளித்து, அவற்றிற்கு ஆக்கமும் ஊக்கமும் தந்து வருகிறார்கள். அவற்றின் விளைவாக அங்கெல்லாம் கல்வித் துறையானது விரைந்து வளர்ந்து சிறந்து பொலிகிறது. "கல்வி அறிவில்லாதவர்கள் எங்கள் நாட்டில் யாரும் இல்லை" என்று செம் மாந்து சொல்லத்தக்க செவ்விய நிலை அந்த நாடுகளில் ஏற்பட்டுள்ளது என்றால், அதற்குக் காரணம், அந்த நாடுகளின் அரசாங்கங்கள், தனியார் பள்ளிகளுக்கு எத்தகைய இடையூறுகளையும் ஏற்படுத்தாமல், அவற்றின் வளர்ச்சிக்கு முழு ஒத்துழைப்பையும் அளித்து வருவதே ஆகும். அதே பாதையை நம்முடைய அரசாங்கத்தாரும் பின்பற்றினால்தான் இந்த நாட்டுக் கல்வித் துறையும் விரைந்து வளரும்.

அவர்களைக் கேட்டால் போதாது!
இவர்களையும் கேளுங்கள்!!

இந்தப் பிரச்சினைகளையும் சிக்கல்களையும் எடுத்து விளக்கி, புதிய திட்டத்தை மாற்றி அமையுங்கள் என்று நம் "ஆரம்பக் கல்வி" இதழானது பலமுறை அரசாங்கத்திற்கு வேண்டுகோள் விடுத்திருக்கிறது. ஆங்காங்குள்ள ஆரம்பப்பள்ளி நிர்வாகிகள் சங்கங்களும் ஆரம்ப ஆசிரியர்கள் சங்கங்களும் அதே வகைக் கருத்தைக் கொண்ட தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பியிருக்கிறார்கள். நிர்வாகிகள் சங்கத்தின் தூது குழு கல்வித்துறை இயக்குநர் அவர்களைப் பேட்டி கண்டு நிலைமையை விளக்கிச் சொல்லியிருக்கிறது. இப்படியெல்லாம், புதிய திட்டத்தால் விளையக்கூடிய ஆபத்துக்கள் விளக்கிக் காட்டப்பட்ட பிறகு, அரசாங்கத்தார், உடனடியாக எத்தகைய நடவடிக்கையிலும் இறங்க வேண்டாம் என்று நிர்வாகிகளைக் கேட்டுக் கொண்டிருப்பதோடு, இந்தப் பிரச்சினையை முழு விவரங்களோடு ஆராய்ந்து பார்த்து ஒரு முடிவைத் தெரிவிக்கும்படி, சட்டமன்றக் கல்வி ஆய்வுக் குழுவினரைக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

தமிழ் நாட்டுக் கல்வி அமைச்சர் அவர்களால் அண்மையில் தமிழ் நாட்டுச் சட்ட மன்றத்தில் தெரிவிக்கப்பட்டுள்ள இந்த விவரத்தை நாம் முழு மனதோடு வரவேற்கிறோம். கல்வித் துறையின் எதிர்காலத்தையே மாற்றி அமைக்கக்கூடிய பேராற்றலும் பேராபத்தும் படைத்த ஒரு திட்டத்தைத் தாங்களாகவே கொண்டு வந்து விடாமல், எல்லாக் கட்சிகளின் பிரதிநிதிகளையும் கொண்ட சட்டமன்ற ஆய்வுக் குழுவின் ஆலோசனைக்கு விட்டிருப்பது, கண்ணியமும் கடமை உணர்ச்சியும் மக்களாட்சிப் பண்பாடும் நிறைந்த நற்செயலாகும். கல்வித் துறையானது, அரசியல் கட்சிப் பூசல்களுக்குள் சிக்கிச் சிதையாமல் ஒதுங்கியிருந்து வளரவேண்டிய ஒரு சிறப்பான பகுதி என்பதை நன்கறிந்து, அதற்கு ஏற்ற வகையில்

எடுக்கப்பட்டிருக்கிற இந்த முடிவுக்காகக் கல்வி அமைச்சர் அவர்களை நாம் மனமாரப் பாராட்டுகிறோம்.

ஆனால் அப்படிப் பாராட்டி மகிழ்கிற அதே நேரத்தில் இந்த ஏற்பாடு மட்டும் போதாது என்பதை நாம் தெரிவித்தாக வேண்டியிருக்கிறது. இந்த சட்டமன்ற ஆய்வுக் குழுவில் பல்வேறு கட்சிகளின் பிரதிநிதிகள் இருக்கின்றார்கள் என்பது உண்மை. அவர்கள் எல்லாம் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு, மக்களின் கருத்துக்களைத் தெரிவிக்கும் மக்களின் குரல்கள் என்பதும் உண்மைதான். அத்தகையவர்களின் கருத்துக்களைக் கேட்டு அறிந்து அதன்படி நடக்க வேண்டியதுதான் ஜனநாயக முறை என்பதும் மறுக்கமுடியாத உண்மை. ஆனால் அந்தக் குழுவில் உள்ளவர்களெல்லாம் பொது மக்களின் பிரதிநிதிகளே தவிர, ஆரம்பப் பள்ளிக்கூட நிர்வாகிகளின் பிரதிநிதிகளோ, ஆரம்ப ஆசிரியர்களின் பிரதிநிதிகளோ அல்ல. அவர்கள் பொது மக்களின் கருத்தைப் பிரதிபலிப்பவர்களே தவிர, ஆரம்பக்கல்வி பற்றிய பல்வேறு பிரச்சினைகளிலும் நேரடியான அனுபவமோ ஆழ்ந்த பயிற்சியோ இல்லாதவர்கள். எனவே இந்தத் துறையில் நீண்டகால அநுபவம் படைத்த உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளையும், ஆசிரியர்களையும் கொண்ட ஒரு ஆய்வுக் குழுவிடம் இந்தப் பிரச்சினையை விடுத்து, அவர்களுடைய அனுபவ பூர்வமான கருத்துகளைக் கேட்டுப் பெற்று, அதன் பிறகு பிரச்சினையைச் சட்டமன்றக் குழுவிடம் அனுப்புவதே முறை. உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தாரின் பிரதிநிதிகள் ஐவர், உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஆசிரியர்கள் சங்கப் பிரதிநிதிகள் ஐவர் ஆகப் பதின்மர் கொண்ட ஒரு குழுவை அரசாங்கத்தார் அமைத்து அவர்களிடம் பிரச்சினையை முதலில் ஆராய்ச்சிக்கு அனுப்பி, அதன் பிறகு சட்டமன்றக் குழுவுக்கு அனுப்பினால், சிறந்த பயன் விளையும்; உயர்ந்த திட்டம் உருவாகும்; பெற்றோர்கள்—ஆசிரியர்கள்—நிர்வாகிகள்—ஆட்சியாளர்கள் ஆகிய நான்கு திறத்தாருக்கும் ஏற்ற செயல் முறை கிடைக்கும். அரசாங்கத்தார் அன்புகூர்ந்து இந்த ஏற்பாட்டை ஏற்பார்களானால் கல்வித் துறையின் எதிர்காலம் வலிவும் பொலிவும் மிகுந்ததாகத் திகழும்.

ஆராய்ச்சி தேவை—அவசரம் வேண்டாம்!

"வருகிற ஜூன் மாதத்திலிருந்து உத்தேச மாறுதல் அமுலுக்கு வருமென்று அரசாங்க உத்தரவு கூறுகிறது. இந்தக் கெடுவை முதலில் எடுத்துவிட வேண்டும். அப்படிச் செய்து விட்டால்தான் நிர்ப்பந்தமற்ற பரிசீலனைக்கு வழி பிறக்கும்;" என்று "தினமணி" இதழ் தெரிவித்திருப்பது மிகச் சிறந்த கருத்தாகும். புதிய திட்டத்தை 1959-60-லிருந்து நடைமுறைக்குக்

கொண்டு வருவது என்கிற ஏற்பாட்டை ஓராண்டுக்கு ஒத்திவைப்பது மிக மிக அவசியமான செயலாகும். அப்படி ஒத்திவைத்தால்தான், ஆசிரியர்கள் — மாணவர்கள் — பெற்றோர்கள் — நிர்வாகிகள் — அரசாங்கம் ஆகிய பல்வேறு சாராரையும் மிகப் பெரிய அளவில் பாதித்து ஆரம்பக் கல்வித் துறையின் எதிர்காலத்தையே மாற்றி அமைத்துப் புதிய வடிவம் அளிக்கக்கூடிய இந்தத் திட்டத்தை, ஓய்வாக அமர்ந்து சிந்தித்துப் பார்த்து, நிதானமான முறையில் திட்டங்களைத் தீட்டி, கல்வித் துறை வல்லுநர்களை யெல்லாம் அழைத்துப் பேசி, நாட்டுக்கு நன்மை தரத்தக்க முறையில் திருத்தி அமைக்க முடியும். அப்படியில்லாமல், மார்ச்—ஏப்ரல்—மே—ஆகிய இந்த மூன்றே மாதங்களுக்குள் பிரச்சினையைத் தீர்த்து விடவேண்டும் என்கிற துடிதுடிப்பை முன்னால் நிறுத்தி, அவசர அவசரமாகத் திட்டம் தீட்டி, வெந்ததும் வேகாததுமாகப் புதிய ஏற்பாட்டைப் பரிமாறினால், கல்வியின் வளர்ச்சி கட்டாயம் தடைப்படும். "தினமணி" இதழானது மிக விளக்கமாகத் தெரிவித்திருப்பதைப் போல, "உதவி பெறும் பள்ளிகளையெல்லாம் மேற்கொண்டு நல்லபடி நடத்தக்கூடிய நிலைமையோ, பண வசதியோ அரசாங்கத்திடம் இல்லை. இதற்கு ஆகும் அவகாசம் ஒருபுறமிருக்க, ஏராளமான குழந்தைகளுக்குப் படிப்புத் தடைபடும். இருக்கும் பள்ளிக்கூடங்களில் நெரிசல் அதிகமாகும். உபாத்தியாயர்கள் பெருவாரியாக வேலை, சர்வீஸ் வசதி, அந்தஸ்து முதலியவற்றை இழக்க நேரிடும். எனவே இதைப்பற்றி அடிப்படையான சிந்தனை தேவை. விரிவான ஆலோசனை தேவை. அந்த ஆலோசனையானது அதற்கு ஏற்ற சூழ்நிலையில் நடைபெறுவது முக்கியமானது. இது உடனடியாக முடிவு செய்தாக வேண்டிய அவசர விஷயமல்ல. நெடுநாளாக இருந்துவரும் நிலைமையை போதிய தகவல்—பரிசீலனை—விவாதம் இல்லாமல் ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் மாற்றப் பார்ப்பது அபாயகரமானது."

ஆகவே, அரசாங்கத்தார், திட்டத்தை ஓராண்டுக்குத் தள்ளி வைத்துவிட்டு, பள்ளி நிர்வாகிகள் — ஆசிரியர்களின் ஆய்வுக் குழுவை அமைத்து, அதன் மூலம் திட்டத்தைத் திருத்தி அமைத்து, அதன் பிறகு சட்ட மன்ற ஆய்வுக் குழுவின் மூலம் அதற்கு இறுதி வடிவம் அமைப்பதே சாலச் சிறந்த ஏற்பாடாகும். அத்தகைய ஏற்பாட்டை அவர்கள் அன்பு கூர்ந்து மேற்கொள்ள வேண்டும் என்பதே நம்முடைய பணிவான வேண்டுகோள். ஆரம்பக் கல்வி உலகத்தின் பேராவலும் அதுவே.

— —

தமிழ் நாடகத் தந்தை

இன்றையதினம் தமிழ் நாடகத் துறையானது, வலிவும் வனப்பும் மிகுந்ததாய், தெளிவும் திறமையும் நிறைந்ததாய், ஆழமும் அகலமும் அமைந்ததாய், கண்ணுக்கும் கருத்துக்கும் ஒருங்கே விருந்தளிக்கும் தன்மையதாய் ஒளி வீசித் திகழ்கிறது. கல்லார்க்கும் கற்றவர்க்கும் ஒருங்கே களிப்பருளும் நற்பொருளாய் அது காட்சி தருகிறது. உயர்ந்த கருத்தும் சிறந்த கதையமைப்பும் மிக இனிய உரைநடையும் அமையப்பெற்ற தமிழ் நாடகங்கள் வரிசை வரிசையாக அரங்கேற்றப்பட்டு, மக்களின் கைதட்டுதலை மட்டுமல்ல, அவர்களின் உள்ளங்களையும் கவர்ந்துகொள்ளும் அரிய காட்சியைத் தமிழகம் அடிக்கடி கண்டு மகிழ்கிறது இந் நாளில்.

ஆனால் ஐம்பது ஆண்டுகளுக்கு முன்னால் இருந்த நிலை இது அல்ல. "நாடகமா ஆடுகிறாய் நீ? செச்செச்சே" என்று "பெரிய மனிதர்கள்" என்கிற நிலையில் இருந்தவர்கள், நாடகக் கலையையே இழித்தும் பழித்தும் பேசிவந்த நாட்கள் அவை. நாடகம் எழுதுவோரை வேறு வேலையற்ற வீணர்கள் என்றும், நாடக உறுப்பினர்களாக நடித்துவந்தவர்களைக் கூத்தாடிக் கும்பல் என்றும் கேலிச் சொற்களை வீசிக் கிண்டல் புரிந்து வந்த காலம் அது. நாடகம் என்பது நாட்டு மக்களின் வாழ்க்கையைத் திருத்தி அமைக்கவல்ல ஆற்றல் மிக்கதோர் கருவி என்ற உண்மையை மிகப் பலர் புரிந்துகொள்ளாமலும், புரிந்துகொண்டிருந்த ஒரு சிலர் வெளியே சொல்ல அஞ்சி நடுங்கியும், அஞ்சாமல் கூறிய அறிஞர்கள் பழி சுமத்தப்பட்டு ஒதுக்கப்பட்டும் வந்த வேளை அது. அப்படிப் பட்ட காலத்தில், பிறருடைய கேலியையும் கண்டனத்தையும் தூசுகள் என ஒதுக்கித் தள்ளிவிட்டு, அஞ்சாத நெஞ்சத்துடன் முன்னால் வந்து, நாடகக் கலையின் நற்சிறப்பை—அந்தச் சிறப்பை உயர்த்தித் தீரவேண்டியதன் இன்றியமையாமையை—அப்படிச் செய்வதால் நாட்டுக்கு விளையக் கூடிய நற்பயனை — இவற்றையெல்லாம் எடுத்தெடுத்து விளக்கியவர், **நாடகப் பேராசிரியர் பம்மல் சம்பந்த முதலியார்.**

நாடகக் கலையின் உயர்வையும் உன்னததத்தையும் எடுத்து விளக்கியதோடு நில்லாமல், பல அரிய கருப் பொருள்களை வைத்து எண்பதுக்கு மேற்பட்ட எழில் மிக்க நாடகங்களைத் தீட்டி, "நாடகத் தமிழ் என்று ஒன்று எங்கேயப்பா இருக்கிறது—முத்தமிழ் என்று பேசுகிறார்களே தவிர இருப்பது இரு தமிழ்தான்- ஒன்று, இயல் தமிழ்! மற்றொன்று, இசைத் தமிழ்!" என்று கிண்டல் பேசி வந்தவர்களின் வாயை அடைக்கச் செய்த பெருமை, அண்ணல் சம்பந்தனாரின் தனி உரிமை.

நாடகங்களைத் தீட்டியதோடு தன்னுடைய கடமை முடிந்துவிட்டது என்று கருதி வாளா கிடந்தவர் அல்லர் சம்பந்தனார். பொறுப்பும் சிறப்பும் மிகுந்த பெரியதோர் பதவியில் இருந்ததையும் பொருட்படுத்தாமல், தானே முகத்துக்குச் சாயம் பூசிக்கொண்டு, மேடையேறி முதன்மையான கதை உறுப்பினர் வேடம் புனைந்து, அனைவரின் உள்ளத்தையும் அள்ளிக்கொள்ளத்தக்க வகையில் நடித்திருக்கிறார் அந்த நல்லறிஞர். தான் நடித்தது மட்டுமல்லாமல், **சுகுண விலாச சபை** என்கிற நாடக அமைப்பு ஒன்றை உருவாக்கி நூற்றுக் கணக்கான இளைஞர்களுக்கும், அதிகாரிகளுக்கும், வழக்கறிஞர்கள்—டாக்டர்கள் போன்ற பொறுப்பான நிலையில் இருந்தவர்களுக்கும் நடிப்புக் கலையில் ஆர்வத்தை ஊட்டி நடிக்க வைத்த பெருமை படைத்தவர் அந்தத் தன்னிகரற்ற நாடக ஆசிரியர்.

தமிழ் நாடகக் கலைக்கு இதுபோது ஏற்பட்டுள்ள ஏற்றமும் எழிலும் அந்த பேரறிஞர் தொடங்கி வைத்த அற்புதமான பணியின் அருமையான விளைவுகள் என்று சொன்னால் அது உண்மை; வெறும் பாராட்டு மொழி அல்ல. ஆமாம். ஆகையால்தான் தமிழுலகம் அவரை, **தமிழ் நாடகத் தந்தை** என்று பூரிப்போடும் பெருமிதத்தோடும் சொல்லிச் சொல்லி மகிழ்கிறது; மகிழ்ந்து மகிழ்ந்து பாராட்டுகிறது.

இந்த நூற்றாண்டில், பிறர் எவரும் ஆற்றியிராத அளவுக்கு இயல் தமிழுக்குத் தொண்டாற்றியிருப்பவர் பேரறிஞர் மறைமலையடிகளார். அதுபோலவே ஈடும் எடுப்பும் அற்ற முறையில் நாடகத் தமிழுக்கு நற்பணி புரிந்திருப்பவர் பேராசிரியர் சம்பந்தனார்.

தமிழ் நாட்டின் வரலாற்றில் பொன்னெழுத்துக்களால் பொறிக்கத்தக்க பெரும்பணியை ஆற்றியிருக்கிற தமிழ் நாடகத் தந்தை—ஒப்பற்ற உழைப்பின் உருவம்—நாடும் ஏடும் ஒருங்கே போற்றும் நல்லறிஞர் சம்பந்த முதலியார் அவர்களின் அரும்பணியைப் பாராட்டும் வகையில், இந்திய அரசாங்கத்தின் சார்பில், குடியரசுத் தலைவர் உயர்திரு இராசேந்திரப் பிரசாத் அவர்கள், அண்மையில் 'பத்மபூஷன்' என்கிற பட்டம் தந்து பெருமைப் படுத்தியிருக்கிறார்கள். டில்லி அரசாங்கத்தின் இந்த நற்செயல் கண்டு நாம் பெருமகிழ்ச்சி அடைகிறோம். தகுதி அறிந்து தக்காரைப் பாராட்டிய அரசாங்கம், நம் பாராட்டுக்கு உரியது.

எண்பத்தாறு வயது நிரம்பிய பேராசிரியர் சம்பந்தனார், பன்னெடுங்காலம் வாழ்ந்து, தமிழ் நாடகக் கலையை வாழ்த்த வேண்டும் என்பது தமிழ் மக்களின் உள்ளம் நிறைந்த ஆவல்.

வாழ்க தமிழ் நாடகத் தந்தை! ஓங்குக அவர் புகழ்!!

3 MAR 1959

கடமை உணர்ச்சி

(எஸ். எஸ். மொஹிதீன், ஆசிரியர், திருவண்ணாமலை.)

கார்த்திகைமாதம். எங்கும் வெள்ளக்காடு. பெண்ணையாறும் அதன் முக்கிய ஓடையாகிய செங்கான் ஓடையும் வழிந்தோடிக் கொண்டிருந்தன. அய்யனார் குளம் உடைப்பெடுத்து மல்லூர் ஏரியோடு ஒன்றாகச் சேர்ந்து விட்டது. வீரவநல்லூர் மலைக் காடுகளிலிருந்து நீர் ஊற்றுகள் பெருக்கெடுத்துவிட்டன. செம்மணல் படிந்த செங்கான் ஓடையில் கழுத்தளவு தண்ணீர் ஓடியது.

வீரவநல்லூர், அரகண்டநல்லூர் நேர் போக்கு வரத்து வண்டிப் பாதையில் வெள்ளம். ஓடை எது, பாதை எது என்று தெரியவில்லை. வீரவநல்லூர் தாழம்பூப் புதர்கள்தான் தெரிந்தன. வீரவநல்லூர் வண்டிப் பாதையும், கரையோரமுள்ள இருதயபுரம் கிறிஸ்தவர் கல்லறையும், செங்கான் ஓடையும் ஒன்றாகவே தோற்றமளித்தன.

எங்குப் பார்த்தாலும் சேறும் சகதியும்தான் காட்சி அளித்தன. அந்த வெள்ளத்திலும் வீரவநல்லூர் வாசிகள் பத்துப் பதினைந்து பேர், தலையில் முண்டாசுடன் ஓடையில் இறங்கிக் கழுத்தளவு தண்ணீரில் அரகண்டநல்லூர் வந்து சேர்ந்து விட்டனர். அவர்கள் வீரவநல்லூர் கூலியாட்கள்.

அந்தக் கூலியாட்களின் வாழ்க்கை, அந்தப் புழுதிபடிந்த அரகண்டநல்லூர் மணிலா அரவை மில்களில்தான் அடங்கியிருந்தது. மழைக்கும், வெள்ளத்திற்கும் பயந்து வீடுகளில் தங்கிவிட்டால் அவர்களுடைய வாழ்க்கை ஓடம் எவ்வாறு ஓட முடியும்?

அவர்கள் காலையில் வீரவநல்லூரை விட்டு வந்தால் மாலையில் அந்த மணிலா மில் மேஸ்திரி செவிட்டு ராமசாமி கொடுக்கும் 100 புதுக்காசுகளுடன் வீரவநல்லூர் திரும்புவார்கள். அவர்களில் சிலர் அந்தப் பொக்கிஷத்தையும் வீரவநல்லூருக்கு எடுத்துக்கொண்டு போகாமல் அரகண்டநல்லூர் கடைத்தெருவிலே காலியாக்கி விடுவார்கள்.

அந்தக் கூலியாட்கள் மட்டுமல்ல. வீரவநல்லூர் வாசிகள் அத்தனைப் பேரின் வாழ்க்கையும் அரகண்டநல்லூரையே சார்ந்திருந்தது. வீரவநல்லூரின் பொருளாதாரச் சக்கரமே அரகண்டநல்லூரைச் சுற்றித்தான் சுழன்றுகொண்டிருந்தது.

அவர்களுடைய கொடுக்கல், வாங்கல், பால், தயிர், காய்கறிகள் வியாபாரம் எல்லாமே அரகண்டநல்லூரில்தான் நடந்துகொண்டிருந்தது.

வீரவநல்லூர் காய்கறிகள் காலையில் அரகண்டநல்லூர் வந்தால்தான் மாலையில் காசாகும். அந்தக் காசும் அரகண்டநல்லூர் மளிகைக் கடைகளிலும், கிரோஸின் டிப்போவிலும், அய்யனார் டூரிங் டாக்கிசிலும் தஞ்சம் புகுந்துவிடும்.

இவ்வாறு வீரவநல்லூர் வாசிகள் அத்தனைபேரும் அரகண்டநல்லூரைச் சார்ந்து வாழ, ஒரே ஒரு அரகண்டநல்லூர் ஜீவன் மட்டும் வீரவநல்லூரைச் சார்ந்து வாழ்ந்தது. அது வேறு யாருமில்லை. அரகண்டநல்லூர் இளைஞர் அழகேசனார்தான். வீரவநல்லூரில் சென்ற ஆண்டு புதிதாக ஆரம்பிக்கப்பட்டிருக்கும் மாவட்டக் கழக ஓராசிரியர் பள்ளியின் ஆசிரியர் அந்த இளைஞர்.

பல இடங்களில் பல ஆண்டுகளாக வேலைக்கு அலைந்து அலைந்து முடிவில் அவருக்குக் கிடைத்த வேலை அது. அதுவே அழகேசனுக்கு ஓர் ஒப்பற்ற வேலை கிடைத்ததுபோல் ஆகிவிட்டது.

அரகண்டநல்லூரை விட்டுக் காலை எட்டு மணிக்கு அழகேசன் கிளம்பினால் வீரவநல்லூர் பாடசாலையில் அவர் பாதம் விழ எட்டே முக்கால் மணியாகிவிடும். மூன்று மைல் பிரயாணம் முக்கால் மணியைச் சாப்பிட்டுவிடும்.

காலையில் ஒரு கையில் பை. இன்னொரு கையில் குடை. பையில் சில புத்தகங்களும், மத்தியான உணவிற்குக் கொஞ்சம் தயிர் சாதமும் இருக்கும். இப்பிரயாண வசதிகளுடன் அழகேசன் செங்கான் ஓடையைக் கடந்து வீரவநல்லூர் போவார். மாலையில் களைத்துச் சோர்ந்து வீடு திரும்புவார்.

கடந்த பதினைந்து மாதங்களாக ஆசிரியர் அழகேசனின் வாழ்க்கை வண்டி இதே முறையில்தான் ஓடிக்கொண்டிருந்தது. ஒருநாள் விடியற் காலையில் ஆசிரியர் அழகேசனைச் சந்தித்த வெட்டியான் வேலன், "அழகேசா, இன்று ஓடையில் அதிகமாகத் தண்ணீர் வருகிறது. பள்ளிக்கூடம் போவதாக இருந்தால் மிகவும் ஜாக்கிரதையாகப் போ," என்று சொல்லிவிட்டுப் போனான்.

"இன்று பள்ளிக்கூடம் போகிறாயா? நான்கு பேர் ஓடையில் இறங்கினால் நீயும் இறங்கு. இல்லாவிட்டால் வேண்டாம்" என்று அதிகாலையில் அழகேசனின் தந்தையார் தன் அருமைப் புதல்வனுக்கு அறவுரை கூறிவிட்டு வெளியே சென்றார். காலை மணி ஏழிருக்கும். அழகேசனின் தாயார், அம்புஜம் அம்மையார் அடுப்பங்கரையில் வேலையில் இருந்தவர்கள், அங்கிருந்தபடியே அழகேசனைக் கூப்பிட்டு, "அப்பா அழகேசா! ஓடையில் தண்ணீர் அதிகமாக இருக்கிறதாம். நீ இன்று பள்ளிக்கூடம் போக

வேண்டாம். இன்று ஒரு நாள் தானே பள்ளிக்கூடம்; இன்று வெள்ளிக் கிழமை லீவு போட்டு விட்டால் அப்புறம் சனி, ஞாயிறு லீவுதான். அதற்கு அப்புறம் திங்கள் கிழமைக்குள் தண்ணீர் வற்றிவிடும்.'' என்று தன் மகனுக்கு லீவு எடுத்தாக வேண்டிய யதன் அவசியத்தை வற்புறுத்திச் சொன்னார்கள். ஆனால் அழகேசன் அவ்வளவு சீக்கிரம் லீவு எடுத்து விடுவாரா? எடுக்கவிடுமா அவருடைய கடமை உணர்ச்சி!

"நேற்று சாயந்திரம் வரும் போது தண்ணீர் அவ்வளவாக இல்லையேம்மா. இராத்திரி மழைக்குக் கொஞ்சம் தண்ணீர் வந்திருக்கும். இன்று ஒரு நாள் மட்டும் தானேம்மா? பள்ளிக்கூடம் போய்விட்டு வந்து விடுகிறேன்! இன்று இன்ஸ்பெக்டர் வேறு வருவதாகக் கூறியிருக்கிறார். இல்லாவிட்டால் லீவு போட்டு விடுவேன் அம்மா'' என்று தலையை வாரியபடி அழகேசன் கூறினார்.

"இன்ஸ்பெக்டர் வருகிறார்,'' என்ற வார்த்தையைக் கேட்டதும் அம்புஜத்தின் சுருதி இறங்கிவிட்டது. 'என்னமோப்பா! என் மனதில் இருக்கிறதைச் சொன்னேன் எதற்கும் ஆண்டவன் இருக்கிறான்! ஜாக்கிரதையாகப் போய்விட்டு வா. வெள்ளம் அதிகமாக இருந்தால் திரும்பி விடு,'' என்று கூறிவிட்டுத் தயிர் சாதம் கிண்டுவதில் ஈடுபட்டார் அந்த மூதாட்டியார்.

அழகேசன் எப்போதுமே தடுக்க முடியாத காரணம் இருந்தாலொழிய லீவு போடுவது கிடையாது. அப்படியே தப்பித் தவறி லீவு போடுவதாயிருந்தாலும் இரண்டு நாட்கள் முன்னதாகவே மாணவர்களிடம் சொல்லி விடுவார். ஓராசிரியர் பள்ளி அல்லவா? அவர் போய்த் தானே பள்ளிக்கூடத்தையே திறக்க வேண்டும்! ஆகவேதான் அழகேசனிடம் அளவுக்கு மீறிய கடமை உணர்ச்சி குடிகொண்டிருந்தது. அன்றைய தினம் தவறாமல் பள்ளிக்கூடம் போக வேண்டியதற்கு இன்னொரு காரணமும் இருந்தது. முந்திய நாள் மாலை பள்ளிக்கூட இன்ஸ்பெக்டர் அழகேசன் வாங்கிக் கொடுத்த ஒரு கப் காபியைச் சாப்பிட்டுவிட்டு, "என்னய்யா! நாளை உம்முடைய ஸ்கூலுக்கு வரேன்! ரிகார்ட்ஸ் எல்லம் ஒழுங்காக வையும்,'' என்று கூறி விட்டுச் சென்றிருக்கிறார்.

வெள்ளத்திற்கும் துணிந்தவராய் அழகேசன் ஏழரை மணிக்கே கிளம்பிவிட்டார் - தன் கடமையை நிறைவேற்ற. ஓடை அருகே வந்ததும், அவரை அறியாமலே அவருடைய வாய், "அப்பாடா! தண்ணீர் மிக அதிகமாக ஓடுகிறதே.'' என்று முணுமுணுத்தது. ஆற்றிற்கு அந்தக் கரையில் இருந்த வீரவநல்லூரில் இருந்து நான்கைந்து கூடைகளும், ஆட்களும் இறங்கிவருவது நன்றாகத் தெரிந்தது. அரகண்ட நல்லூரிலிருந்து இரண்டொருவர்

இறங்கி அக்கரைக்குச் செல்வதும் தெரிந்தது. அழகேசன் தயங்கிய படியே ஓடையில் இறங்கி முழங்கால் தண்ணீரில் நின்றார். தண்ணீரின் வேகம் தாங்க முடியாததாக இருந்தது. போவதா, வேண்டாமா? என்று அழகேசனின் மனம், ஒரு கணம் - ஒரே ஒரு கணம்தான்-தயக்கத்தோடு, சிந்தித்தது.

"ஏன் சார் நீங்கக்கூட போறீங்களா? வெள்ளம் அதிகமாக இருக்கிறதே! வேண்டாம் சார்! போவதா தீங்க! நடுவில் பள்ளம் வேறு விழுந்திருக்கு" என்று வீரவநல்லூர் தலையாரி அழகேசனைப் பார்த்து எச்சரிக்கை செய்துவிட்டுக் கிராம சபைக் கணக்குப் புத்தகங்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு சென்றான்.

"போகாமல் இருக்கிறது நல்லது சார். போய்த்தான் ஆக வேண்டும்னு, உடனே போயிடுங்க சார். அப்புறம் சப்இன்ஸ்பெக்டர் வந்துருவாரு. அவரு வந்து விட்டால், யாரையும் இறங்க விடமாட்டாரு" என்று கான்ஸ்டேபிள் கண்ணுசாமி பீடியைக் குடித்துக்கொண்டே உத்தரவு போட்டான்.

உடனே ஆசிரியர் அழகேசன் மளமள வென்று தண்ணீரில் இறங்கிவிட்டார். இப்போது அவருக்கு முன்னும் பின்னும் யாரும் காணோம். முதலில் இறங்கிய வீரவநல்லூர் வாசிகள் எப்போதோ அக்கரை யேறி தாழம்பூ புதர்களுக்குப் பின்னால் சென்றுவிட்டனர்.

இக்கரையில் கான்ஸ்டேபிள் கண்ணுசாமியும் நாலைந்துபேரும் நின்றுகொண்டிருந்தனர்.

ஆற்றின் நடுப்பகுதியைக்கூட ஆசிரியர் அடையவில்லை. அதற்குள் ஆற்றுத் தண்ணீரின் வேகம் பல மடங்கு அதிகமாகி அவருடைய உடல் தள்ளாடத் தொடங்கிவிட்டது. அதே நேரத்தில் "ஏய் 801, ஏன் அந்த ஆளை இறங்கவிட்டாய்?" என்று சப் இன்ஸ்பெக்டர் விக்டரின் அதட்டும் குரல் அழகேசனுக்குத் தெளிவாகக் கேட்டது. அதைத் தொடர்ந்து, "சார், அந்தக் கரைக்குப் போகமுடியாது; வெள்ளம் அதிகம். இப்படியே திரும்பி வந்துடுங்க," என்று கண்ணுசாமி அழகேசனைப் பார்த்துக் கத்தினான்.

அழகேசன் திரும்பிவிட்டார். தண்ணீர் நொப்பும் நுரையுமாகச் சீறிப் பாய்ந்தோடி வந்தது இப்போது. விநாடிக்கு விநாடி தண்ணீரின் இழுப்பு அதிகமாகி வந்தது. வெள்ளத்தோடு வந்த முள் புதர்கள், தன்மேல் படாமல் இருப்பதற்காகத் தன் குடையால் அந்த முள்ளை ஒதுக்கினார் அழகேசன். அவ்வளவுதான். குடை முட்புதரோடு செல்ல ஆரம்பித்தது. குடையைப் பிடிக்க முயற்சித்தார். டிபன் பாக்சும், வீரவநல்லூர் பள்ளிக்கூட ரிகார்டுகளும் அந்த செங்கான் ஓடைக்கு அர்ப்பணமாயின. அதைத்

தொடர்ந்து அழகேசன் தலைக்குப்புற விழுந்தார். புது வெள்ளத்தின் ஓ என்ற இரைச்சல் காதைத் துளைத்தது. தாழம்புதரை நோக்கி அழகேசனை இழுத்துக்கொண்டு ஓடிற்று வெள்ளம்.

"ஏய், எயிட் நாட் ஒண், அந்த ஆளைக் காப்பாற்று. ஓடு, ஓடு" என்கிற சப் இன்ஸ்பெக்டரின் குரல். பிறகு, யாரோ தண்ணீரில் குதிக்கும் சப்தம் அவ்வளவுதான் அழகேசன் செவிகளில் விழுந்தன. அதன் பிறகு அழகேசன் கண் விழித்துப் பார்த்தபோது விழுப்புரம் ஆஸ்பத்திரியின் அறை ஒன்றில் படுக்கைமீது தான் கிடத்தப்பட்டிருப்பதைத் தான் உணர முடிந்தது.

சில வாரங்களுக்குப் பிறகு, செய்தித்தாள்களில், "கான்ஸ்டேபிள் கண்ணுசாமியின் தீரம்—ஆற்றில் மூழ்க இருந்த ஆசிரியரைக் காப்பாற்றினார்," என்கிற தலைப்புகளுடன் ஒரு செய்தியும், கண்ணுசாமியின் புகைப்படமும் வெளியாகியிருந்தன. அந்தச் செய்தியில்,

"தென்னூர்க்காட்டைச் சேர்ந்த கான்ஸ்டேபிள் கண்ணுசாமி நெ. 801 என்பவர் ஆற்றில் மூழ்க இருந்த ஓர் ஆசிரியரைக் காப்பாற்றியதற்காக, அவருடைய கடமை உணர்ச்சியையும், தீரத்தையும் பாராட்டி அரசினர், அவருக்குத் தங்கப் பதக்கம் பரிசளித்து கௌரவித்தனர். இப்படிப்பட்ட தீரமும் கடமை உணர்ச்சியும் உள்ளவர்களால் தான் நம் நாடு முன்னேற முடியும்," என்கிற வரிகளும் காணப்பட்டன.

கான்ஸ்டேபிள் கண்ணுசாமியின் கடமை உணர்ச்சியைப் பாராட்டித் தங்கப் பதக்கம் அளித்ததற்காக அரசாங்கத்தைப் பாராட்ட வேண்டியதுதான். ஆமாம், கட்டாயம் பாராட்டத் தான் வேண்டும். ஆனால், அதே கடமை உணர்ச்சி வசப்பட்டுப் பள்ளிக்கூடம் போவதற்காக வெள்ளத்தில் வீழ்ந்து இறக்க இருந்த ஆசிரியர் அழகேசனை, அரசாங்கமும் சரி, பத்திரிகை ஆசிரியர்களும் சரி, ஒரு வார்த்தை கூட பாராட்டவில்லையே—அது ஏன்? இந்தக் கேள்வியைத்தான் அரகண்டநல்லூர் வாசிகளால் கேட்க முடிந்ததே தவிர அதற்கான விடையை அவர்களால் கண்டறிய முடியவில்லை! அவர்களால் மட்டுமா—நம்மால் கூடத்தான் அறிய முடியவில்லை!

மறு பரிசீலனை தேவை

ஆரம்பக் கல்வி விஷயமாக சர்க்கார் பிறப்பித்துள்ள ஒரு உத்தரவு பரவலாகக் கவலையை விளைவித்துள்ளது. தனிப்பட்ட நிர்வாகங்கள் நடத்திவரும் ஆரம்பப் பாடசாலைகளில் அடுத்த ஆண்டிலிருந்து மாணவர்களிடம் சம்பளம் வசூலித்தலாகாது; இலவச போதனை தரும் பள்ளிக்கூடங்களுக்குத்தான் கிராண்டுகள் உண்டு; சம்பளம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்களுக்கு கிராண்டு கிடையாது என்பதுதான் சர்க்காரது உத்தரவின் பொருள். சம்பளம் வசூலிக்கும் பள்ளிக்கூடங்கள் நடப்பதற்கு ஆட்சேபணையில்லை; ஆனால் சர்க்கார் குறிப்பிடும் பாட திட்டத்தைப் பின்பற்றினால்தாம் அவற்றிற்கு அங்கீகாரம் இருக்கும் என்பதையும் உத்தரவு தெளிவாக்குகிறது.

ஆரம்பக் கல்வியை இலவசமாக்குவதுதான் சர்க்காரது இந்த உத்தரவின் நோக்கம். ஆனால் இது நிறைவேறச் செய்வதற்கு உத்தரவில் காணப்படும் முறைதான் சரியானதா என்ற பிரச்னை எழுகிறது. ஏற்கெனவே அரைச் சம்பள, முழுச் சம்பள வஜாச் சலுகை பெற்றுவந்த ஏராளமான குழந்தைகளின் சம்பள வருவாய் நஷ்டமாகி வருவதற்கு ஓரளவு நஷ்டஈடு தரப்பட்டு வருகிறது. அதுவே போதுமானதாக இருக்கவில்லை என்று பல நிர்வாகங்கள் குறைப்பட்டுக்கொண்டிருக்கும் நிலைமையில், இந்தப் புதிய உத்தரவு வந்திருக்கிறது. இதன் விளைவுகள் கவனத்திற்குரியவை.

பல பள்ளி நிர்வாகங்கள் சர்க்காரது உத்தரவைக் காரணமாகக் காட்டி, தமது ஆசிரியர்களுக்கு வேலை நீக்க நோட்டீஸ் கொடுத்திருப்பதாகப் புகார்கள் கிடைத்துள்ளன. இப்போக்கு வலுத்தால் ஆயிரக் கணக்கில் உபாத்தியாயர்கள் தவிப்பார்கள். பெரும்பாலான இடங்களில் உடனடியாகப் பள்ளிக்கூடங்கள் இல்லாமல் போய்விடும். வேறு மாற்று ஏற்பாடுகளை சர்க்கார் செய்வதாக இருந்தாலும் அது பயனளிக்குமா? எத்தனை வருஷமாகும் என்றெல்லாம் கேள்விகள் எழத்தான் செய்யும். மண்பாண்டக்காரனுக்குப் பலநாள் வேலை, தடிக்கம்பு வைத்திருப்பவனுக்கு ஒரு நிமிஷ வேலை என்ற ரீதியில், ஆரம்பக் கல்வி அமைப்பும் வசதியும் நிலைகுலைந்து விடுமோ என்று அஞ்சவேண்டியிருக்கிறது. எனவே சம்பந்தப்பட்ட எல்லோரையும் கலந்துகொண்டு தீர்க்காலோசனை செய்து தனியார் அமைப்பு நிலைகுலைந்து போகாமல் இலவச ஆரம்பக் கல்வியை அளிப்பதன் சாத்தியக் கூறுகளைப் பரிசீலிப்பது அவசியம். செய்வதைத் திருந்தச் செய்வது இன்றியமையாதது.

ஆரம்பக் கல்வி பயிலும் மாணவர்களில் 60% வரை நிர்வாகிகள் நடத்தும் ஸ்கூல்களில்தான் படிக்கிறார்கள். தவிர அதிகாரிகள் எவ்

வள்வுதான் சிம்பு வைத்துக் கட்டினுலும் முனிசிபாலிடி, ஜில்லா போர்ட் ஸ்கூல்களை விட பெரும்பாலான மானேஜ்மெண்ட் பள்ளிக் கூடங்களில்தான் போதனை, படிப்பு, மாணவர் நடத்தை ஆகிய எல்லாமே உயர்ந்து காணப்படுகின்றன. இந்த அளவுக்கு சர்க்கார்த் துறை பள்ளிக்கூடங்களின் தரத்தை உயர்த்துவதுதான் முக்கிய பிரச்னை. அதற்கு வழி கண்டால், மற்ற சம்பந்தப்பட்ட பிரச்னைகளுக்குத் தீர்வு காண்பது சுலபமாக இருக்கும். மானேஜ்மெண்டார் வசூலிக்கக்கூடிய சம்பளத்துக்கு ஒரு வரம்பு கட்டி, ஏழை மாணவர்களுக்கு மட்டுந்தான் இலவசக் கல்வி என்பதைக் கொள்கையாக்கி, மற்றவர்கள் தமது குழந்தைகளின் படிப்புக்குச் செலவழிக்கும்படி விடும் கிராண்டு ஏற்பாடுதான் நியாயமானது.

கிராண்டே இல்லாத பள்ளிக்கூடங்கள் நெடுநாளைக்கு நீடித்து நடைபெறுவது சாத்தியமல்ல. ஒரு தாலூகாவுக்கு ஒன்றிரண்டுதான் அம்மாதிரி நீடித்து நடைபெறக் கூடும். இது எவ்வளவோ சிக்கல்கள் நிறைந்த பிரச்னை. எனவே போதிய விவேகத்துடன் கூடிய மறுபரிசீலனை நடைபெறுவது அவசியமெனத் தோன்றுகிறது.

—"தினமணி"

தலையங்கம் (28-1-59)

சமூக நூல்
பயிற்சிப் புத்தகம்

இயற்றியவர் :

T. S. உமாபதி, M. A., L. T., (Dip-in-Geog.)

6-ஆம் வகுப்பு	0 10 0
7-ஆம் வகுப்பு	0 10 0
8-ஆம் வகுப்பு	0 10 0

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்

('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)

94–95, புதுத்தெரு, மண்ணடி, சென்னை–1.

திருநெல்வேலி ஜில்லா எய்டெட் பாடசாலை நிர்வாகிகள் சங்க மாநாடு.

திருநெல்வேலி நகர் தாயம்மையம்மையார்
முதியர் ஆதாரப்பள்ளியில்
17—1—1959 சனிக்கிழமை மாலை 4 மணிக்கு நடைபெற்ற
மாநாட்டின்போது

மாநாட்டு வரவேற்புக் குழுத் தலைவர்

திரு. K. மீனாட்சிசுந்தரம் பிள்ளை நிகழ்த்திய

வரவேற்புரை.

பெரியோர்களே !

இம் மாவட்டத்தின் பல்வேறு இடங்களிலிருந்தும் இங்கு திரண்டு வந்துள்ள பள்ளி நிர்வாகிகளே! கல்வி வளர்ச்சியில் பேரன்பு கொண்ட பெரியோர்களே! உங்கள் அனைவரையும் இம் மாநாட்டின் சார்பாகப் பேரன்புடன் வரவேற்கின்றேன்.

கல்வித்துறையில் நம் மாவட்டத்தில் நற்றொண்டாற்றி வரும் திருமந்திரநகர் வ. உ. சி. கல்லூரி ஆட்சியாளர் உயர் திரு. A. P. C. வீரபாகு B. A., M. L. A அவர்கள் *இம் மாநாட்டைத் திறந்து வைத்து ஆசீர்வதிக்கும்படி அன்புடன் வரவேற்கின்றேன்.*

இம் மாவட்டத்தின்கண் பொதுச் சேவையாளரும் சட்ட வல்லுனருமான உயர்திரு. S. P. சிவசுப்பிரமணிய நாடார் B. A. B. L., M. L. C அவர்கள் *இம் மாநாட்டைத் தலைமையேற்று நடத்தித் தருமாறு அன்புடன் வரவேற்கின்றேன்.*

நமது மாகாண சர்க்கார், ஆரம்பக் கல்வியைப் பரப்ப அதிக முயற்சி எடுத்தும், ஆசிரியர்களின் சம்பளத்தை உயர்த்தியும், ஆசிரியர்களுக்கு பென்ஷன் திட்டமும், பிள்ளைகளுக்கு இலவசக் கல்வியும், மதிய உணவுத் திட்டமும் ஏற்படுத்தியதை, கல்வியின் நாட்டம் கொண்டுள்ள யாரும் போற்றாமல் இருக்க இயலாது.

ஆனால் நம் மாகாணத்தில் உள்ள 22000 *துவக்கப் பள்ளிகளில்* 12000 *துணைவழிப்பள்ளிகளை* (Aided Schools) *சிறந்த முறையில் நடத்திவரும் நிர்வாகிகளின் நிலை மிக மிகக் கவலைக்கிடமாகவுள்ளது. நமது சர்க்கார் ஆரம்பப் பள்ளிகளுக்கு சம்பள வசூல் நஷ்ட ஈடு சம்பந்தமாக சமீபத்தில் வெளியிட்ட* G. O. No. P.S. 2124/29-11-58

உத்திரவு, கல்வித் துறையில் வெடிகுண்டு மாதிரி வெடித்தமையால் அநேகர் பள்ளியை நடத்துவதா? மூடுவதா? என்ற பிரச்சினையில் இருக்கின்றனர்.

சம்பளம் வசூல் செய்யும் ஆரம்பப் பள்ளிகளுக்குக் கொடுக்கப் பட்டு வருகிற, குறைவான சம்பள வசூல் நஷ்டஈடு கிராண்டைக் கொண்டும் (Fee Compensation Grant) சம்பளம் வசூலிக்காத இலவச ஆரம்பப் பள்ளிகளுக்குக் கொடுக்கப்பட்டு வருகிற 15 சத விகிதத்திற்கு மேற்படாத நிர்வாக கிராண்டைக் கொண்டும் (Maintenance Grant) அநேகமாக எல்லா நிர்வாகிகளும் தங்கள் பள்ளிகளைத் திறம்பட நடத்தியும், ஆரம்பக் கல்வியின் முன்னேற் றத்தை உச்சநிலைக்குக் காட்டியும், சர்க்காருக்கு உதவியாகக் கல்விப் பணியில் ஈடுபட்டு வருவதோடு, ஆரம்பக் கல்விக்காகச் சர்க்கார் செலவுகளைப் பெருவாரியாகக் குறைத்தும் நற்றொண்டு ஆற்றி வரு கிறார்கள்.

ஆனால் இப்பொழுது கொடுக்கப்பட்டு வரும் சம்பள வசூல் நஷ்டஈடு கிராண்ட் (Fee Compensation Grant) நிறுத்தப்பட்டு 15 சதவிகிதத்திற்கு மேற்படாத நிர்வாகக் கிராண்டு மட்டும் (Maintenance Grant) கொடுக்கப்படுமானால், எல்லா ஆரம்பப் பள்ளிகளும் விசேஷமாக நகரங்களிலுள்ள பள்ளிகள் பாதிக்கப்படுவது நிச்சயத் திலும் நிச்சயம்.

ஏனெனில், உதாரணமாக ஐந்து ஆசிரியர்களுள்ள ஒரு பள்ளியை எடுத்துக்கொண்டால் அப் பள்ளிக்குக் கிடைக்கக்கூடிய சர்க்கார் சம்பளத் தொகை (Teaching Grant) மாதம் $(45\times1)+(30\times4)=$ ரூ. 165, வருஷத்துக்கு ரூ. 1980 ஆகும். இப்பள்ளிக்கு அதிகபட்சம் கிடைக்கக்கூடிய நிர்வாகக் கிராண்டு (Maintenance Grant) 15% விதம் ரூ. 297 தான். இந்த 15% நிர்வாகக் கிராண்டு மிகச் சொற்பப் பள்ளிகளுக்கே வழங்கப்படுகிறது. ஏனைய பள்ளி களுக்கு 10%, 5%, $2\frac{1}{2}$% விதமே வழங்கப்பட்டு வருகிறது. இவ் வாறு வழங்கப்பட்ட நிர்வாகக் கிராண்டைக் கொண்டு நிர்வாகிகள் தங்கள் பள்ளிகளை எவ்வாறு நடத்தி வந்திருப்பார்கள் என்பதைச் சற்று சிந்திக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். ஷெ ஐந்து வகுப்புள்ள ஆரம்பப் பள்ளிக்கு வருடத்துக்கு,

கட்டிட வாடகை சுமார்	ரூ. 360—00
ஆசிரியர் பிராவிடெண்டுபண்டுக்கு நிர்வாகி கட்டவேண்டிய தொகை.	... 62—00
பள்ளிகளின் சிப்பந்தி சம்பளம்	... 360—00
ஸ்டேஷனரி, தளவாடச் சாமான்கள் முதலியன	... 90—00

கை வேலை, தோட்டவேலைச் செலவுகள்	...	60—00
விளையாட்டு, பரீட்சை, சுற்றுலா முதலியவைகள்	...	60—00
தளவாடச் சாமான்கள், ரிப்பேர் வகைக்கு	...	30—00
	ஆக மொத்தம் ரூ.	1022—00

ஆனால் ஹை பள்ளிக் கட்டிடம் சொந்தமாக இருந்தால் வாடகைக்குப் பதிலாக ரிப்பேர் செலவு வருடத்துக்கு ரூ. 60 வைத்துக் கொண்டாலும் மொத்தச் செலவுத் தொகை ரூ. 722 ஆகும். மேலே காட்டப்பட்டுள்ள செலவுகளை எவ்வளவு குறைத்துப் பார்த்தாலும் ரூ. 400-க்குக் கீழ் குறையவே குறையாது. அப்படி இருந்தும் ஹை பள்ளி நிர்வாகி ரூ. 297-க்கு மேல் தன் கையிலிருந்து செலவு செய்து திறம்பட நிர்வகித்து வருகிறார். ஆகையினால் சர்க்கார் இதனை மனதில் கொண்டு வழக்கம்போல் சம்பள வசூல் நஷ்டஈடு கிராண்டு (Fee Compensation Grant) கொடுத்தும், நிர்வாகக் கிராண்டு (Maintenance Grant) 25%-க்குக் குறையாமலும் 50%-க்கு அதிகப்படாமலும் கொடுக்கும்படி சர்க்காரைக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ஆசிரியர், நியமனம், நீக்குதல் சம்பந்தமாக நிர்வாகிகளுக்கு எவ்வித உரிமையும் இல்லாதது மிகவும் வருந்தத்தக்கதாகும். சர்க்கார் சட்டதிட்டங்களுக்கு உட்பட்டு ஒரு ஆசிரியரை நியமிக்கவும் நீக்கவும் பள்ளி நிர்வாகிகளுக்கு உரிமை இருந்தால்தான் பள்ளியின் முன்னேற்றமும் ஒழுங்கும் நிலை நிற்கும்.

ஆதலால் இதையும் நமது சர்க்கார் உடனடியாகக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இது போன்ற எங்களது குறைகளை தலைவர் அவர்களும், திறப்பாளர் அவர்களும் மற்றும் சட்டசபை உறுப்பினர்களும் பள்ளி நிர்வாகம் திறம்பட நடைபெற ஆவன செய்யுமாறு கேட்டுக்கொள்வதோடு இங்கு திரண்டுள்ள அனைவரையும் வருக வருக என வரவேற்கின்றேன்.

இங்ஙனம்,

K. மீனாட்சிசுந்தரம் பிள்ளை

வரவேற்புக்குழுத் தலைவர்.

மாநாட்டில் நிறைவேறிய தீர்மானங்கள்

1. சம்பள வசூல் நஷ்டஈடு கிராண்டுத் தொகை

G. O. No. P.S. 2124/29-11-58 பிரகாரம் சென்னை அரசாங்கம் ராஜ்யத்திலுள்ள எல்லா மக்களும் இலவசமாக ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளுக்குக் கல்வியளிக்கும் திட்டத்தை இம் மாநாடு ஆதரிக்கிறது. ஆனால் 1-6-59 முதல் எய்டெட் ஆரம்பப் பள்ளிகளில் பிள்ளைகளிடம் சம்பளம் வாங்காமலும் அந்தச் சம்பள நஷ்டஈட்டிற்கு உண்டான தொகையை அரசாங்கம் ஈடு செய்யாமல் பள்ளி நிர்வாகிகளால் பாடசாலைகளை நடத்துவதென்பது இயலாத காரியம். எனவே பாடசாலைகளை மூடவேண்டியதைத் தவிர வேறு வழி காண இயலவில்லை என்பதை மிக வருத்தத்தோடு இம் மாநாடு அரசாங்கத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறது. ஆகவே உடனடியாக ஷை உத்தரவை ரத்து செய்யும்படி இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

2. நிர்வாக கிராண்டு (Maintenance Grant)

தற்போது அரசாங்கம் கொடுக்கும் குறைந்த சதவீத நிர்வாகத் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு தற்கால விலைவாசிகளின் ஏற்றத்தின் காரணமாய் பாடசாலைகளை நடத்துவதற்கு கஷ்டமாக இருப்பதால் அவசியமான செலவுகளை சரிக்கட்ட குறைந்தபட்சம் 25% முதல் 50% வரை ஷை கிராண்டை உயர்த்தும்படி இம் மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.

3. வாடகை கிராண்டு (Rent Grant)

வாடகைக் கட்டிடத்தில் இருக்கும் பாடசாலைகளுக்கு வாடகையை கிராண்டாக (Rent Grant) கொடுக்கும்படி இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

4. இட வசதி (Accommodation)

ஆதாரப் பள்ளிகளில் மாணவர்களுக்கு 15 சதுர அடி வீதம் இருக்க வேண்டும் என்பதை ஜன நெருக்கடியின் காரணமாக இட வசதி கிடைக்க மார்க்கமில்லாததால் $9\frac{1}{2}$ சதுர அடியே இருக்கும்படி மாற்றியமைக்க இம் மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

5. ஆசிரியர் நியமனம், நீக்குதல். (Appointment and Termination)

ஆசிரியர் நியமனம் நீக்குதல் சம்பந்தமாக நிர்வாகிகளுக்கு எல்லா உரிமையும் இல்லாத நிலைமை குறித்து இம் மாநாடு வருந்துகிறது. திறம்பட பாடசாலை நிர்வாகம் நடத்துவதற்கு ஆசிரியர்களை

நியமனம் செய்வதற்கும், நீக்குவதற்கும நிர்வாகிகளுக்கு உரிமை இருத்தல் அவசியம் என்பதை இம் மாநாடு சர்க்காரை வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிறது. ஒரு ஆசிரியர் வேலையிலிருந்து நீங்கிக்கொள்ள விரும்பினால் அவர் நிர்வாகிக்கு மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து எப்படி நீங்கிக்கொள்கிறாரோ அதேபோல நிர்வாகிகளும் மூன்று மாத நோட்டீஸ் கொடுத்து ஆசிரியர்களை நீக்குவதற்கு பள்ளி நிர்வாகிக்கு உரிமை கொடுக்கும்படி சர்க்காரை இம் மாநாடு கேட்டுக் கொள்ளுகிறது.

6. ஆசிரியர் மாணவர் விகிதம் (Teacher – Pupil Ratio)

மாணவர்களுக்கு கல்வி திறம்படக் கற்பிக்க ஒரு ஆசிரியருக்கு 20 மாணவர்கள் வீதம் முன்பு இருந்தது போலவே மாற்றி அமைக்க வேண்டுமென்றும், ஒரே நிர்வாகத்தின் கீழுள்ள பாடசாலைகளில் ஆசிரியர்களை ஒரு பள்ளியிலிருந்து மற்றொரு பள்ளிக்கு மாற்றும் போதும் தனிப்பட்ட பாடசாலைகளில் புதிதாக நியமனம் செய்யும் பொழுதும் மேற்கண்ட விகிதத்தையே அனுஷ்டிக்கும்படி இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

7. மதிய உணவு கிராண்டு (Midday Meals Grant)

மதிய உணவிற்குத் தற்பொழுது கொடுத்துவரும் 6 புதிய காசுகள் மிகவும் குறைவாக இருப்பதாலும் பொது மக்களிடம் இருந்து உதவி தொடர்ச்சியாகக் கிடைக்காததாலும் ஒரு மாணவனுக்கு 15 புதிய காசுகள் வீதம் கொடுக்கும்படியும் அப்படிக் கொடுக்க முடியாவிட்டால் இந்தத் திட்டத்தைக் கைவிட்டு விடும்படியும் சர்க்காரை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

8. பியூன் அல்லது ஆயா (Peon or Conductress)

எல்லாப் பாடசாலைகளுக்கும் ஒரு பியூன் அல்லது ஆயா (Peon or Conductress) நியமனம் செய்யவும் அவர்களுக்கு கிராண்டு (Grant) கொடுத்து உதவும்படி சர்க்காரை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

9. கல்வி சம்பந்தமாக சர்க்காரால் செய்யப்படும் சீர் திருத்தங்களை பள்ளியின் நிர்வாகிகளையும் கலந்து அதற்காக அமைக்க இருக்கும் கமிட்டிகளில் (Block development Advisory Committee, Advisory Council etc) பிரதிநிதித்துவம் கொடுக்கவேண்டுமாய் இம்மாநாடு சர்க்காரைக் கேட்டுக்கொள்கிறது.

10. தனியார் அல்லது கமிட்டியார் நிர்வகித்துவரும் பாடசாலைகளை பஞ்சாயத்து யூனியனின் நிர்வாகத்தின் கீழ் ஒப்படைக்கும் திட்டத்

தைப்பற்றி இம்மாநாடு மிகவும் வருந்துகிறது. உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசினர் கொடுக்கும் உதவித் தொகையை (Grant) பஞ்சாயத்து யூனியன் மூலம் கொடுக்காமல் இப்பொழுதுள்ள முறைப்படி அரசினரே நேரடியாகப் பள்ளி நிர்வாகஸ்தர்களுக்குக் கொடுத்து வரும்படி அரசினரைக் கேட்டுக்கொள்கிறது.

திருநெல்வேலி,
17-1-1959.

M. சதானந்தசுந்தரம் பிள்ளை,
செயலாளர்.

திருச்சி மாவட்ட
ஆரம்ப ஆசிரியர் சங்கம்

18-1-59 ஞாயிறு காலை 10 மணிக்கு திருச்சிராப்பள்ளி மாவட்ட ஆரம்ப ஆசிரியர் சங்க அமைப்புக் கூட்டம் திருச்சி பெரிய செளராஷ்டிரத் தெருவில் இருக்கும் செளராஷ்டிரா ஆரம்பப் பள்ளியில் நடைபெற்றது. ஆசிரியர்களின் சமூக, பொருளாதார முன்னேற்றத்திற்குப் பாடுபடவும், தனியார் துறை நிர்வாகங்களில் நடைபெறும் சம்பளப் பிடித்தம், திடீர் வேலை நீக்கம் முதலிய தீமைகளுக்குப் பரிகாரம் தேடவும், பெற்றோர்களுக்கும் ஆசிரியர்களுக்குமிடையே தொடர்பை ஏற்படுத்தி, அதன் மூலம் நாட்டின் படிப்புத் துறை சீர்படவும் ஆரம்ப ஆசிரியர்களுக்கான தனிச் சங்கம் தேவை என்ற அடிப்படையில் இக்கூட்டம் கூட்டப்பட்டது. நகரின் பல பகுதிகளிலிருந்தும் ஏராளமான ஆசிரியர்கள் வந்திருந்தனர். கூட்டத்திற்கு தென்னூர் உயர்தர ஆரம்பப் பாடசாலை தலைமை ஆசிரியர் திரு மாணிக்கம் பிள்ளை தலைமை வகித்தார். கூட்டத்தின் அமைப்பாளர்கள் திரு. கொ. அ. கோவிந்தன், திரு. எஸ். தம்பித்துரை ஆகியோர் புதிய சங்கம் அமைக்கப்படவேண்டிய காரணத்தை விளக்கியும், கூட்டத்திற்கு வந்திருந்த ஏராளமான ஆசிரியர், ஆசிரியைகளைப் பாராட்டியும் பேசினர். பின்னர் திரு. ஜான் வில்லியம், திரு. D. லாசர், திரு. ராம் மோகன், திரு. ரெத்தினம், திரு. சுப்பராவ், திரு. ஐயாசாமி, திரு. வெங்கட்ராமன், திரு. P. சந்தனசாமி, திருமதி கிரேஸ் தாமஸ் முதலியவர்கள் புதிய சங்கத்தின் தேவை பற்றியும், ஒற்றுமை பற்றியும் பேசினர். பின்னர் திரு S. பூமிநாதன் B. A. B. T. அவர்கள் தற்போது படிப்புத் துறையில் காணப்படும் குறைகளை எடுத்துக் காட்டி ஆசிரியர் ஒற்றுமை பற்றியும் பேசினார். சங்கத்தின் நிர்வாகத்தினர்களாகக் கீழ்க்கண்டவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டனர். திரு. P. சந்தனசாமி, தலைவர்; திரு. சுப்பராவ், துணைத்தலைவர்; திரு. கொ. அ. கோவிந்தன், பொதுச் செயலாளர்; திரு. ஜான் வில்லியம், திரு. எஸ். தம்பித்துரை, திரு. நமச்சிவாயம்

திரு. ராம் மோகன், திருமதி கிரேஸ் தாமஸ், திருமதி இருதயமேரி துணைச் செயலாளர்கள்.

கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன :

1. தற்போது அரசினர் நாட்டின் முன்னேற்றம் கருதி "இலவசப் படிப்புத்" திட்டம் கொண்டு வந்திருப்பதை இக்கூட்டம் வரவேற்பதோடு மகிழ்ச்சியையும் தெரிவித்துக்கொள்கிறது.

2. நிர்வாகிகளுக்குத் தேவையான உதவித் தொகை கொடுக்க அரசாங்கம் மறுத்தால் பள்ளிகளை மூடிவிடுவதாக நிர்வாகிகள் யோசனை செய்துகொண்டிருப்பதால், அரசினர் இதுபற்றி உடனடியாக மேலும் ஆராய்ந்து முடிவு செய்வதோடு, அப்படிப் பள்ளிகள் மூடப்பட்டால் ஆசிரியரின் ஊழியம் தடைப்படாமல் அரசாங்கமே எடுத்து நடத்தி ஆசிரியருக்கான சம்பளத்தைத் தடையின்றி வழங்கும்படி கேட்டுக்கொள்கிறது.

3. ஆசிரியர்களுக்கு நிர்வாகிகள் மேற்கண்ட காரணங்களைக் காட்டி நோட்டீஸ் கொடுக்க இருப்பதை அரசாங்கம் தடுப்பதோடு T. P. F. இடைக்கால நிவாரணம் முதலியவைகளை எக் காரணத்தைக் கொண்டும் நிர்வாகிகள் நிறுத்தாமல் இருக்க அரசாங்கம் உத்தரவிடும்படி கேட்டுக்கொள்கிறது.

4. ஆரம்ப நிலை (Higher Grade) ஆசிரியர்களின் சம்பளத்தை உடனடியாக மாற்றி உயர்வு அளிக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

5. செகண்டரி கிரேடு ஆசிரியர்கள் எங்கு, எப்பொழுது வேலை செய்தாலும் அவர்களுக்கு உரிய சம்பளத்தை 45-2-85 என்ற விகிதத்தில் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

6. நீண்ட காலமாக ஆசிரியர்கள் கேட்டு வரும் வீட்டு வாடகை அலவன்ஸ் ஆசிரியர்களுக்கு உடனடியாகக் கொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

7. தற்போது அதிகமான ஆசிரியர்கள் பயிற்சி பெற்று வருவதால் வேலை இல்லாத் திண்டாட்டம் அதிகரித்துக்கொண்டே வருவதால் அரசினர் கருணை கூர்ந்து அதிகமான ஆரம்பப் பள்ளிகளைத் திறப்பதோடு, புதிதாகப் போதனா முறைப் பள்ளிகள் (Training Schools) ஏற்படுத்துவதைத் தற்காலிகமாக நிறுத்தி வைக்கும்படி கேட்டுக்கொள்கிறது.

8. எந்த ஆசிரியரும் குறைந்த சம்பளத்திற்கு வேலை செய்யாமல் நமது உரிமைகளையும் கடமைகளையும் மதித்து நிர்வாகம் நடத்தும் நிர்வாகிகளுடன் ஒத்துழைக்கும்படி இக் கூட்டம் கேட்டுக் கொள்கிறது.

பின்னர் கூட்டத்தின் செயலர் கூட்டத்திற்கு வந்திருந்த ஏராளமான ஆசிரிய, ஆசிரியைகளைப் பாராட்டியும், புதிதாக ஏற்படுத்தப்பட்டிருக்கும் நமது சங்கத்தில் எல்லோரும் அங்கத்தினர்களாகச் சேரும்படியும், தனிப்பட்ட பள்ளி நிர்வாகிகள் இது போன்ற ஆசிரியர் சங்கத்திற்கு ஊக்கம் அளிக்கும்படியும் கேட்டுக்கொண்டு, எல்லோருக்கும் நன்றி கூறக் கூட்டம் இனிது முடிந்தது.

தலைவர் : P. சந்தனசாமி

செயலர் : கொ. அ. கோவிந்தன்

வடாற்காடு மாவட்ட துணை வழி துவக்கப்பள்ளிகளின் ஆசிரிய நிர்வாகிகள் - நிர்வாகிகள் சங்கம்

வேலூர்.

வடாற்காடு மாவட்ட ஆசிரிய நிர்வாகிகள் – நிர்வாகிகள் சங்கக் கூட்டம், 19-1-59-ந் தேதி திங்கட்கிழமை மாலை 4-30 மணிக்கு வேலூர் திரு. இலட்சுமணசாமி முதலியார் நகர மண்டபத்தில் கூடியது. அவ்வமயம் உயர்திரு V. K. கிருஷ்ணமூர்த்தி, M.L.A. அவர்கள் தலைமை வகித்தார். நகர மன்றத் தலைவர் உயர்திரு V. R. சீதாபதி, B.A.B.L. அவர்களும், வடாற்காடு மாவட்ட காங்கிரஸ் சபைத் தலைவர் திரு. R. ஜீவரத்தினம் அவர்களும் சொற்பொழிவாற்றுகையில், தனியார் நடத்தும் பள்ளிகளின் நற்பணி பல நாட்டிற்குத் தேவைப்படுவதால், அவைகள் நம் நாட்டிற்கு அவசியம் தேவையென்றும், அதிகமான கல்வியின் தேர்ச்சியை நாட்டினருக்கு அளிப்பது தனியார் நடத்தும் தொடக்கப் பள்ளிகள்தானென்றும், அப்பள்ளிகளை நடத்துபவர்களின் சிறந்த நிர்வாகத்தைப் பற்றியும், தற்போது நமது அரசியலாரிடம் நிர்வாகிகள் வேண்டும் கோரிக்கைகளை காருண்யமுள்ள இந்த அரசியலார் கருணையுடன் நிறைவேற்ற வேண்டுமெனவும், நல்லுரையாற்றினார்கள். பின்பு சங்கக் கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

1. அரசியலார் வெளியிட்டிருக்கும் இலவச ஆரம்பக் கல்வி திட்டத்தினால் வடாற்காடு மாவட்டத்தில் சுமார் 200 தொடக்கப் பள்ளிகளில் வேலை செய்யும் ஆசிரியர்களுக்கு 1959 ஜூன் மாதத்தி லிருந்து வேலையில்லாத் திண்டாட்டம் ஏற்படும் என்று இக்கூட்டம் எடுத்துக்காட்டுகிறது. தொடக்கப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்து வதற்குத் தற்போது அமுலில் இருக்கும் சம்பள நஷ்டஈடு விகிதத்தை இரண்டு மடங்கு வகுப்புவாரி உயர்த்திக் கொடுக்கவேண்டுமென்று இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

2. பாடசாலைகளுக்குக் கொடுக்கவேண்டிய கட்டிட வாடகை களை சர்க்கார் கொடுத்து, மாதப் பிரதி மாதம் ஆசிரியர்களுக்கு கொடுக்கப்படும் மான்யத்தில் 30 சத வீதம் நிர்வாக கிராண்டு (Maintenance Grant) எக்காரணத்தைக்கொண்டும் குறைக்காமல் கொடுக்கவேண்டு மென்று இச்சங்கம் கேட்டுக்கொள்ளுகிறது.

3. இவ்வாறு அளிக்க அரசினரால் இயலாவிட்டால் தனியார் நடத்திவரும் தொடக்கப்பள்ளிகளுக்கு ஏற்படும் எல்லா செலவினங் களையும் கருணைமிக்க அரசினரே அளித்து தனியார் நடத்தும் தொடக்கப்பள்ளிகளுக்கு நல் ஆதரவை நல்கும்படி இச்சங்கம் பணி வன்புடன் கேட்டுக்கொள்ளுகிறது. தற்போது நடைமுறையில் ஓர் ஆசிரியருக்கு 35 பிள்ளைகள் இருக்க வேண்டுமென்பதை, ஓர் ஆசிரிய ருக்கு 25 பிள்ளைகள் வீதம் இருக்க வேண்டுமென, மாற்றியமைக்க மாண்புமிக்க அரசினரை இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது.

4. சென்னை அரசாங்கம் வெளியிட்டிருக்கும் உத்திரவு G. O. P. S. No. 2124 Education dated 29th November '58 - சென்னை மாநில கல்வி இயக்குநர் அவர்களுடைய R. O. C. No. 940 B 7/58 Dated 5-12-'58 உத்திரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென்று இக்கூட்டம் கேட்டுக்கொள்ளுகிறது. இது சம்பந்தமாக கனம் பொருந்திய முதல் அமைச்சரையும், கல்வி இயக்குநர் அவர்களையும் நேரில் கண்டு ஆவன செய்ய, பத்து பேர்கள் கொண்ட தூதுக் குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

S. புண்ணியகோட்டி,
சங்கக் காப்பாளர்.

C. அப்பாசாமி,
சங்கச் செயலாளர்.

S. K. பழனி அய்யா,
சங்கத் தலைவர்.

B. ராஜகோபாலன்,
பொருளாளர்.

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

நாடகத்தில் உலவுவோர்

பெரிய மருது சின்ன மருது	...	சிவகங்கை ஜமீனைச் சேர்ந்தவர்கள்
முத்துவடுகநாத உடையணத் தேவர்	...	சிவகங்கை அரசன்
வேலு நாச்சி	...	அரசி
புதுக்கோட்டைத் தொண்டைமான்	...	புதுக்கோட்டை மன்னன்
முத்தய்யன்	...	உண்மைத் தொண்டன்
முனியம்மா	...	முத்தய்யன் மனைவி
கறுத்தான்	...	தொண்டைமான் கையாள்
கண்ணம்மா	...	கறுத்தான் மனைவி
கர்னல் வெல்ஷ் கர்னல் அக்நியு கர்னல் பிளாக்பர்ன்	...	வெள்ளைத் தளபதிகள்
படமாத்தூர் தேவர்	...	சிவகங்கையின் புதிய அரசன்

மற்றும்

ஆர்க்காட்டு நவாப், ஹைதர் அலி, குண்டான், குறுணி முதலியோர்

காட்சி 16

மே, 1801—புதுக்கோட்டை
கண்ணம்மா வீடு.

(கண்ணம்மா கஞ்சி குடிக்க மறுக்கிறாள். அவள் கணவன் கறுத்தான் சமாதானப் படுத்துகிறான். அவன் அரைகுறையான ஆங்கில உடை அணிந்திருக்கிறான்.)

கறுத்தான் :—இந்தா, புள்ளே ! கஞ்சி குடிச்சுட்டு அப்புறம் உன் முறைப்பை வச்சுக்க !

கண்ணம்மா :—நான் ஒண்ணும் உங்கிட்ட கொஞ்சறதுக்கு வால. நீ, போ உன் வேலையை பார்த்துகிட்டு !

கறுத்தான் :—அதென்னடி அப்படி சொல்றே. நான் என்ன தவறு செஞ்சுட்டேன்.

கண்ணம்மா:—தவறு செஞ்சா பரவாயில்லையே. காளையார் கோவிலில் இருந்த குடும்பத்தை புதுக்கோட்டைக்கு மாத்திட்டு தறுதலை ஆட்டம் அல்லவா, ஆடறே!

கறுத்தான் :—வாட்...வாட்...! நானு...?

கண்ணம்மா :—இல்லே. நான்தான். மானம் மரியாத கெட்டவனை கட்டிக்கினே (ன்) பாரு, அது என் குற்றம்தான். உனக்கு எத்தனை நாள் சொல்றது. மதுரைக்குப் போய் அந்த பறங்கிப் பயலுக வாலைப் பிடிச்சுகிட்டு, அவனுக பின்னடியே துப்பாக்கி சுமந்துகிட்டு சுத்தாதேன்னு—கேக்கிறயா, நீ. அவனுக கூலிப் பட்டாளத்திலே சேர்ந்து, நம தமிழ் சாதிக்கு எதிரா சண்டை போடறே! மருதய்யங்க உனக்கு சோத்தைப் போட்டு சுகத்தைக் கொடுத்து உன்னை ஆளாக்கினுங்க; காளையார் கோவிலில் உனக்கு ஒரு சிலைகூட வச்சாங்க. நீ நன்றி கெட்ட தனமா அவங்களுக்கே துரோகம் பண்றியே.

கறுத்தான் :—(அபிநயத்துடன்) ஏலே, இந்தா'டி! கை நிறைய பணம் கொடுக்கிறுனுக, பறங்கியனுக. அதனுல அவனுக பக்கம் சேர்ந்தேன். இதிலே தப்பு என்ன கெடக்கு...

கண்ணம்மா :—அட பாவி! வெளியில் சொல்றியே...உனக்கு வெக்கம் இல்லே. (கண் கலங்கி) உன் கட்டையிலே சீழ் இரத்தம் இருந்தா, நீ, வெள்ளையனேடை சேர்ந்து பாஞ்சாலங் குறிச்சிக்குப் போர்வியார்...ஊமைத்துரை ஆறு நாளிலே கட்டின ராமே கோட்டை....இரத்தம் சிந்தி கட்டின அந்தக் கோட்டையை எப்படித்தான் பீரங்கி வைச்சு இடிக்க மனசு வந்தது? உன்னைப்போல ஊமைத்துரையும் தமிழர் இல்லையா? அவருக்கு வந்த அவமானம் உனக்கும் எனக்கும் இல்லையா? நினைச்சாலே வயிறு பற்றி எரியுதே. கல்நெஞ்சக்கார கயவாளிப் பயலுக கட்டபொம்மு ராசாவை கயத்தாத்துல தூக்கு போட்டவனுகளாச்சே. அந்தப் படுபாவிக பட்டாளத்திலே போய் சேர்ந்து இப்படி அக்கிரமம் செய்யறியே! உனக்கு அன்போடு சொல்லிச் சொல்லி எனக்கும் வெறுத்துப் போச்சே...எவ்வளவுதான் சொல்றது. உனக்கு சூடு சொரணை இல்ல...வெக்கம் மானம் இல்ல...

கறுத்தான் :—போடி, இடியட்! நம்ம புதுக்கோட்டை ராசாவே பாஞ்சாலங்குறிச்சி பாளையத்துக்கு எதிரா வேலை செய்யருரு. உனக்கு என்னடி தெரியும்...உலகம் போற போக்கு...

கண்ணம்மா :—(எரிச்சலுடன்) புதுக்கோட்டை ராசா போவா(ன்). பட்டமும் பதவியும் வரும்...ஒட்டிக்கு செட்டியா பணமும் வரும்... வாரிக் கொட்டிக்கலாமுன்னு. உன்னைப்போல பணத் தாசை பிடிச்சவங்களை பீரங்கி எதிரே அனுப்பிச்சுட்டு, அவன் மாளிகையிலே நிம்மதியா உட்கார்ந்திருக்கானில்ல...

கறுத்தான் :—(குழைவாக) பேசாம இரு, கண்ணம்மா! பாஞ்சாலங் குறிச்சி கோட்டையை இடிச்சு தரைமட்டமாக்கி, கொத்த ளத்தை உழுது உப்போடு வரகு கலந்து வாரி விதைச்சுட் டோம். ஊமைத்துரை சிவகங்கைக்கு ஓடிட்டாராம். இன்னும் ரெண்டு நாளில் சிவகங்கை மேல் படையெடுக்கப் போறோம். அது முடிஞ்சதும் நமக்கு நூறு வேலி நிலம் கொடுக்கிறதா புதுக்கோட்டையாரும், வெள்ளைக்கார துரையும் சொல்லி யிருக்காங்க. எப்படியும் நிலம் வந்துடும். அப்புறம் பாரே (ன்). என் கண்ணுட்டி கண்ணம்மாவுக்கு வைரமும் தங்கமும் வாங்கிப் போட்டு சும்மா 'ஜிலு ஜிலு'ன்னு வைச்சுக்கிட மாட்டேனா?

கண்ணம்மா :—அடச் சே! உன் நகையும் நட்டும்...நீயே உன் தலையிலே போட்டுக்க. எனக்கு ஒரு முழக் கயிறு போதும். இனத் துரோகிக்கு வாழ்க்கைப்பட்ட எனக்கு அதைவிட வேறென்ன தண்டனை இருக்கப் போவுது.

கறுத்தான் :—எனக்குத் தெரியும்'டி! இப்ப அப்படிதான் சொல் லுவே! நாளைக்கு நூறு வேலி நிலத்தோட அய்யா வந்தா(ல்), (நிமிர்ந்து சிரித்துக் கொண்டே) வாட்...?

கண்ணம்மா :—அப்பவே விஷம் வைச்சு உன்னைக் கொன்னுட்டு தான் மறுவேலை பார்ப்பேன்!

கறுத்தான் :—(அதிர்ச்சியுடன்) வாட்...வாட்...!

கண்ணம்மா :—வாட்டாவது பூட்டாவது? இந்தா பாரு! நீ தாலி கட்டின புருசன் எங்கிறதால இந்த மட்டுமாவது விடறேன். அடுத்த தடவை, அந்தப் பறங்கியனுக பேச்சை எடுத்துகிட்டு, வீட்டுக்குள்ளாற அடி எடுத்து வச்ச, அப்புறம் நான் எல்லா வற்றையும் மறந்திடுவே (ன்).

கறுத்தான் :—இடியட்! என்னடி உளர்றே?

கண்ணம்மா :—கடைசியா சொல்றேன்! இன்னைக்கு உன்னை ஆளாக வச்சுகிட்டு வேற்றுருத்தருக்கு துரோகம் பண்றவனுக, நாளைக்கு...இன்னொரு ஆளை கையிலே போட்டுகிட்டு உனக்கே ஏன் துரோகம் செய்ய மாட்டானுக! முதலைகளை நம்பி

ஆற்றிலே இறங்கறே. வேண்டாம். இது நம்ம மறவ சாதிக்கு அடுக்காது !

கறுத்தான் :—(சினத்துடன்) முட்டாள் ! நான் முதல் முதல்ல சிவகங்கை சண்டைக்கு புறப்படறபோது, இங்கிலீசு தெரிஞ்சவ மாதிரி புத்தி சொல்ல வந்துட்டா !

(மூலையில் இருக்கும் ஈட்டியை எடுத்துக் கொண்டு வேகமாகப் போகிறான். கண்ணம்மா சோர்வுடன் தரையில் சாய்கிறாள்.)

— திரை —

காட்சி 17

சிறுவயல்—அரண்மனை.

(மருதிருவரும் ஏனையோரும் சாந்துப் புலவர் நடத்திக் கொண்டிருக்கும் காலட்சேபத்தைக் கேட்டுக் கொண்டிருக்கின்றனர்.)

சாந்துப் புலவர்:—இப்படியாகத்தானே சீதாபிராட்டியாரைத் தேடிக் கொண்டு, வாயு புத்திரனை ஸ்ரீ ஆஞ்சநேய மூர்த்தியானவர் ஆகாய மார்க்கமாக கடலைக் கடந்து தென்னிலங்காபுரியை அடைந்தார்...(இராகத்துடன்) தென்னிலங்காபுரியை அடைந்தார்...அடைந்து...

(பாஞ்சைப் பதியில் தப்பிய ஊமைத் துரையும், அவன் நண்பர்களும் கூட்டத்துள் புகுகின்றனர்.)

ஊமைத்துரை :—அங்கே பட்டணம் பறிபோய்க் கொண்டிருக்கிறது, மருது பாண்டியரே ! நீங்கள் இங்கே பஜகோவிந்தம் பாடிக்கொண்டிருக்கிறீர்கள்.

(எல்லோரும் எழுகின்றனர்.)

சி. மருது :—ஆ ! துரை அவர்களா ? வாருங்கள்...வாருங்கள்... (தன் அண்ணனை நோக்கி) நமது பாஞ்சாலங்குறிச்சி சிங்கம், அண்ணா !

ஊமைத்துரை :—ஆமாம், சின்னவரே ! பாஞ்சைப் பதியின் சிங்கம் தான், தன் சொந்த நாட்டை சிறு நரிகளிடம் ஒப்படைத்து விட்டு வந்திருக்கிறது.

சி. மருது :—ஆ! அப்படியா?

பெ. மருது :—ஆச்சரியப் படாதே, தம்பி! நான் அப்போதே யூகித்தேன், இரண்டு நாட்களாக செய்தி வாராததிலிருந்தே ஏதோ தகராறு நடந்திருக்கிறதென்று. எல்லாம் சரியாகி விட்டது! தம்பி! நாம் இன்றே போருக்குப் புறப்படுவோம். வெள்ளம் வருவதற்குள் அணை போட வேண்டும்.

ஊமைத்துரை :—காரியம் மிஞ்சி விட்டது, தோழரே! வெள்ளம் தலைக்குமேல் போய்க் கொண்டிருக்கிறது. வழியில் கேள்விப் பட்டோம். போரில் எனக்கு ஒத்துழைத்ததால் உங்கள் மீது படையெடுக்க, பறங்கியர் இரகசிய ஏற்பாடு செய்து வருகின்றனராம். கும்பினிப்படை இன்னும் நான்கே நாளில் சிவகங்கையை எதிர்க்கலாம்.

சி. மருது :—தினவெடுத்துக் கொண்டிருந்த எங்கள் தோள்களுக்கு சரியான விருந்து. ஊமைத்துரையாரே! உழுவலன்புடைய என் உயிர் அண்ணா! வாருங்கள், என் அருகே! நன்றிகெட்ட இனத் துரோகிகளின் கறை படிந்த இதயங்களின் ஆழத்தைக் காணத் துடி துடிக்கும் இந்த வீரவாளின் மீது உங்கள் வலிய இரும்புக் கரங்களை வையுங்கள்! நஞ்சினும் கொடிய நாசகாலர்களைக் கூண்டோடு ஒழிக்க உறுதி பூண்போம்.

(மூவரும் வீரவாளின்மீது தங்கள் கரங்களை வைத்து சூளுரைக்கின்றனர்.)

சி. மருது :—நாங்கள் பிறந்த செந்தமிழ் நாடு வீரத்தின் விளைநிலம் என்பது உண்மையானால், எங்கள் உடலில் ஓடுவது தமிழ் இரத்தம் என்பது உண்மையானால், உயிரைவிட நாங்கள் மானத்தையே பெரிதும் மதிக்கிறோம் என்பது உண்மையானால், சுதந்திரம் தமிழ்ப் பெரு மக்களின் பிறப்புரிமை என்பது உண்மையானால்,....தமிழகமே....எங்கள் தாயகமே....நாங்கள் கொள்ளைக்குணம் படைத்த வெள்ளைக்காரர்களை ஒழித்துக் கட்டுவோம்...அவர்கள் காலடி படாமல் தமிழ் மண்ணைப் பாது காப்போம்! தவறினால், இனத்தைக் காட்டிக் கொடுக்கும் தறுதலைகளால் நாங்கள் வீழ்ச்சியுற்றால், எங்கள் உயிரையே உன் திருவடிகளுக்குக் காணிக்கையாகத் தருவோம். இது உறுதி...

பெ. மருது :—உறுதி...!

ஊமைத்துரை :—உறுதி...! உறுதி...!

அவையோர் :—உறுதி...! உறுதி...! உறுதி...!!

(அனைவரும் தத்தம் வாளையுருவி உயர்த்தி நிற்கின்றனர்.)

— திரை —

காட்சி 18

பழமனேரி ஆற்றங்கரையில்
கமுதிக் கோட்டை—போர் முகாம்.

(கர்னல் அக்நியுவும், கர்னல் வெல்ஷும்)

அக்நியு :—மிஸ்டர் வெல்ஷ்! என்ன சிலையாக அமர்ந்துவிட்டீர்? உயிருக்கு உயிரான தோழர்களான மருது பாண்டியர் மீது போர் தொடுக்க வேண்டியிருக்கிறதே, என்று?

வெல்ஷ் :—இல்லை. அதற்காக இல்லை! அவர்களை விரைவில் வீழ்த்துவதற்கான வழி முறைகளைச் சிந்திக்கிறேன்.

அக்நியு :—மறைக்காதீர், தோழரே! முகத்தில் படிந்திருக்கும் சஞ்சல ரேகைகளைப் பார்த்தாலே தெரிகிறதே, அகத்தில் ஏதோ ஆகாத எண்ணங்கள் அமிழ்ந்திருக்கின்றன என்பது...

வெல்ஷ் :—நன்றி யுணர்ச்சியால் கடமையைச் செய்யத் தவறி விடுவேனோ என்று சந்தேகிக்கிறீர்களா, கர்னல்!

அக்நியு :—இல்லை. ஆனால், நீ ஓர் கிழக்கிந்தியக் கம்பெனியைச் சேர்ந்தவன்...கிடைத்திருக்கும் நலல பதவியை இழந்துவிடக் கூடாதவன் என்பதை உமக்கு நான் ஞாபகப் படுத்தலாம், அல்லவா?

வெல்ஷ் :—ஓ, தாராளமாக! நான் என் நிலைமையையும் கடமையையும் மறந்துவிட்டால் கவனப் படுத்தலாம். ஆனால், நான் இன்னும் என்னையே மறந்துவிடும் முட்டாளாக வில்லை.

அக்நியு :—சபாஷ்! அதுதான் சரி! ஏனென்றால், சொந்த வாழ்க்கை வேறு...அரசியல் வாழ்க்கை வேறு...!

வெல்ஷ் :—சிறுவயலுக்கு நான் பல தடவைகள் போயிருக்கிறேன். அழகிய சிறு நகரம் அது. அதை முதலில் பிடித்துவிட்டால், பிறகு போமே முடிந்த மாதிரிதான்.

அக்நியு :—எப்படிப் பிடிப்பது? முதலில் நடந்த சண்டையில் முப்பது வெள்ளைத் தளபதிகளையும், முந்நூறு கூலிப் படைஞர்

களையும் பலி கொடுத்திருக்கிறோம். அன்றைய பொழுது விடிவதற்குள் நாம் இராமநாதபுரத்திற்கு ஓடியிருக்காவிட்டால், இன்று நம் இருவர் பிணங்களும் அழுகிப் போய் இருக்கும்; அவற்றின்மீது காகமும் கழுகும் வட்டமிட்டுக்கொண்டிருக்கும்.

வெல்ஷ் :— இருங்கள். அதற்கு வழி ஒன்று இருக்கிறது! புதுக் கோட்டை தொண்டைமானுக்கு ஆள் அனுப்பியுள்ளேன். அவர் வந்ததும்......

(தொண்டைமானும் கறுத்தானும் வருகின்றனர்.)

தொண்டைமான் :—வணக்கம்...!

அக்நியு :—வாருங்கள்! சிறுவயலைக் கவிழ்ப்பதற்காகத் திட்டம் வகுத்துக்கொண்டிருக்கிறோம்.

தொண்டைமான் :—பயனுள்ள திட்டம்...!

வெல்ஷ் :—உம்மால் பாதி நடக்கவேண்டும்

தொண்டைமான் :—சொல்லுங்கள்! மருது பாண்டியர் ஒழிவதாயிருந்தால் என் உயிரையும் தருவேன்!

அக்நியு :—வேண்டாம்...வேண்டாம்! உபயோகமற்றதை வாங்கி நாங்கள் என்ன செய்யப் போகிறோம்.

தொண்டைமான்:—நீங்கள் எதைக் கேட்கிறீர்கள்! என் பரம்பரைப் பகைவரை அழிக்க எது வேண்டுமானாலும் கொடுக்கிறேன்.

வெல்ஷ்:—சிறுவயலுக்கு அருகில் உள்ள பலம் வாய்ந்த கோட்டை...

தொண்டைமான் :—திருமயம்...என் ஆதிக்கத்தில் இருக்கிறது.

அக்நியு :— ஆம்...அதுதான் வேண்டும்!

கறுத்தான் :—அது நல்ல கோட்டைங்க. திருமயத்தில் நம்ம படைகள் தங்கி இளைப்பாற வசதியா இருக்கும். அங்கிருந்து சுலபமா சமுதிக்கு வரலாம்...சிறுவயலை தாக்கலாம்...

வெல்ஷ் :—என்ன, மிஸ்டர் புதுக்கோட்டை...!

தொண்டைமான் :—அய்யா சொல்லிவிட்ட பிறகு, நான் சொல்ல என்ன இருக்கிறது? இன்று முதல் திருமயம் கோட்டையை நீங்களே பயன்படுத்திக் கொள்ளுங்கள்.

அக்நியு :—வாயால் சொன்னால் போதுமா? காற்றில் போய் விடுமே...இதோ...உரிமை சாசனத்தில் கையொப்பமிடுங்கள்.

வெல்ஷ் :—என்ன தயங்குகிறீர்கள்...?

தொண்டைமான் :—ம்...ம்...ஒன்றுமில்லை......

(கை யொப்பமிடுகிறான்.)

தொண்டைமான் :—ம்...எட்டயபுரத்தாரைக் கேட்டால்கூட ஏதாவது உதவி செய்வார்...

அக்நியு :—நல்ல சமயத்தில் ஞாபகப் படுத்தினீர். ஓய், கறுத்தான்!

கறுத்தான் :—சார்!

அக்நியு :—எட்டயபுரத்தாரிடம் சென்று மூவாயிரம் தமிழ் வீரர்களை நமக்குப் பக்க பலமாக அனுப்பச் சொல்.

(கறுத்தான் போகிறான்.)

வெல்ஷ் :—இன்னும் எட்டு நாட்களில் சிறுவயலைப் பிடித்துவிட வேண்டும்.

தொண்டைமான்:—அந்தச் சண்டாளன் ஊமைத்துரைகூட அங்கே தான் இருக்கிறானும். செய்தி வந்தது.

அக்நியு :—சதிகாரன்! பாதாளத்தில் ஓடி ஒளிந்தாலும், பூமியைப் பிளந்தாவது அவனை ஒழிக்காமல் விடப்போவதில்லை.

— **திரை** —

[தொடரும்]

அறிவுச் சுடர்கள்

மக்கள் மன்றத்தில் மகிழ்ச்சியை உருவாக்கும் ஆர்வம் — அந்த மகிழ்ச்சியை உருவாக்குவது எப்படி என்பதற்கான அறிவு — இந்த இரண்டும் ஒரு சேரப் பெற்றிருப்பதே உயர்தரமான அரசாங்கம்.

— **மெக்காலே**

பணி செய்தபடி இருப்பது நல்லது. பணி செய்தபடி இருப்பதுதான் நல்லது. பணி புரியாதபடி படுத்துக் கிடப்பது எந்த மனிதனுக்கும் நல்லதல்ல. ஏன்? எந்தக் கடவுளுக்கும்கூட நல்லதல்ல.

— **கார்லைல்**

மலர்களின் ராணி ரோஜா

(வங்கத் தமிழன்)

உலகில் பல கவிஞர்கள் ரோஜாவின் அருமை பெருமைகளைப் பற்றிப் பலவாறு புகழ்ந்து பாடியிருக்கின்றனர். ரோஜா, மலர்களுக்கெல்லாம் ராஜா இல்லை; ராணி! எழிலிலும், மணத்திலும், குணத்திலும் இணையற்றது அதுவேயாகும். தேவ தேவி மூர்த்திகளுக்கு ரோஜா மலர்களால் அருச்சனை செய்கிறோம். உற்சவ காலங்களில் ரோஜா மாலைகளால் அலங்காரம் செய்கிறோம். சங்கங்கள், சபைகள், கூட்டங்கள் முதலிய இடங்களில் சான்றோர்கள், பெரியோர்கள், தலைவர்கள் ஆகியோரை வரவேற்று, அவர்களுக்கு ரோஜா மாலைகள் அணிவித்து மரியாதை செய்து மகிழ்கின்றோம். கல்யாண காலங்களிலே மணமகனும், மணமகளும் இம்மலர் மாலைகளை ஒருவருக்கொருவர் (மாலை மாற்றுதல்) அணிவித்து அகமகிழ்வதைக் கண்டு களிப்படைகிறோம். மங்கல நிகழ்ச்சிகளிலே ரோஜா மலர்களை மக்களுக்கு வழங்குகின்றோம். அவாகள் அதனைத் தமது சட்டையில் அணிந்துகொண்டு அழகு செய்துகொள்கிறார்கள். நாம் ஒரு ரோஜாத் தோட்டத்திற்கு வெகு தொலைவில் வரும்போதே காற்றில் மிதந்து வரும் ரோஜா மணம் நம்மை எப்படிக் கவர்கிறது! மாதரின் கூந்தலிலே அம்மலரைப் பார்க்கையில் எவ்வளவு இன்பம் தருகிறது! பெண்களின் எழில் மிகுந்த கன்னக் கதுப்புக்களை (Rosy Cheeks) ரோஜாவின் சன்ன நிறத்திற்கு ஒப்பாகச் சொல்வதையும், அவர்களது மென்மேனியை ரோஜாவின் மென்மைக்கு இணையாகக் கூறுவதையும் பாரிலே கேட்டிருக்கிறோம். பார்த்துமிருக்கிறோம்.

பெரும்பாலும் ஆண்களின் அங்கியில் அமர்ந்து அவர்களுக்கு அழகு அளிக்கும் தனி உரிமை ரோஜாவுக்கே உரித்தானது. பிற மலர் ஒன்றையும் ஆண்கள் அணிவதில்லையே!

ரோஜா கண்ணுக்கு இனியது; குளுமை தருவது; மனத்திற்கு மகிழ்ச்சி ஊட்டுவது; உடலுக்கும் நலமளிப்பது; கிருமிநாசினி; இதயத்திற்கு வலிவளிப்பது; தலைவலி-பல் வலி, நிவாரணியுங்கூட! இத்தகைய சிறப்பு வாய்ந்த மலரைப்பற்றி இன்னும் சிறிதளவு விவரிப்போம்.

பழங்கால இலக்கியங்களிலே

கி. மு. 500—ல் ஸாப்வோ என்ற கிரேக்கப் பெண் கவிஞர் கூறியிருக்கின்றார். "ரோஜாவின் அழகு, மணம், குணம் ஆகியவற்றிற்கு இணையான மலர் வேறு எதுவும் இல்லை என்பதை உலகோர் அனைவரும் ஒப்புக்கொள்வர். ரோஜாவே மலர்களுக்கெல்

லாம் அரசி என்றும் கூறத் தயங்கமாட்டார்கள்'' என்று.

ஸிஸிரோ, ஹொரேஸ், ஹிப்போக்ரேட்ஸ், ஹெரோடோடஸ் ஆகியோரின் எழுத்துக்களிலே, ரோஜாவின் மேன்மையைப்பற்றி நிறையக் கூறப்பட்டிருக்கிறது. கிரேக்கர்கள் பொதுக் களியாட்டங்களிலும், மதச் சடங்குகளிலும் ரோஜா மலர்களை ஏராளமாக உபயோகித்து வந்தார்கள். மருந்துச் சரக்காகவும் உபயோகித்திருக்கின்றனர்.

ரோம் சக்ரவர்த்தி நீரோ ஒரு விருந்தில் ரோஜா மலர்களுக்காக 30,000 பவுன் செலவு செய்தாராம்! 'அர்க்க ப்ரகாசம்' என்ற வடமொழி நூலில் ரோஜாவைப் பற்றி, ரோஜாச்சாரம், மலச் சிக்கலுக்கு மருந்து; குளிர்ச்சியையும் துவர்ப்பையும் தரவல்லது; களைப்பையும், தாகத்தையும் தணிக்கக் கூடியது; வாந்தி, கிறுகிறுப்பு, வாய் நாற்றம் ஆகியவற்றை அகற்றும் குணம் கொண்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

ரோஜா வகைகள்

5000-க்கு மேலாகவே ரோஜா வகைகள் இருக்கின்றன என்பது தோட்டக் கலை நிபுணர்களின் கூற்று. எனினும், அவற்றுள் 12 வகைகள்தான் உலகிலேயே வியாபார முறையில் பலவித ரோஜாப் பொருள்கள் தயாரிக்க, முக்கியமாய் ரோஜா எண்ணெய், அத்தர் உற்பத்தி செய்ய உபயோகிக்கப் படுகின்றன. அவை, ப்வுஸ்லி என்ற ஊதா நிறம் (Pink) கொண்டது, ரோஸ் – டி – மை என்ற சன்ன ஊதா நிறமுள்ளது, எட்வர்ட் ரோஸ் என்ற ரோஜாப் பூ, கஸ்தூரி ரோஜா, கரஸ்ஸன் டெப்லிட்ஜ் (Gerssan Teplitz) பர்வானு (Burwana) ஆகியவையும் இன்னும் சிலவுமே. தவிர அலங்காரம் செய்யும் வகைக்கான ரோஜாக்கள் எண்ணிறந்தவை. உதாரணமாக வெள்ளை—சிவப்பு, மஞ்சள், கருநீல, டேபிள் ரோஜாக்கள் முதலியன. மேலும் முட்டைகோஸ் போல் அடர்த்தியான பல நிற ரோஜாக்கள், குறைவான – சில இதழ்களையே கொண்ட ரோஜாக்கள், ஒட்டுச் செடிகள் மூலம் (Grafting) கிடைப்பவை, இப்படியாக எத்தனை எத்தனையோ வகைகள் உண்டு.

ரோஜாக்கள் முறையே, புதர்கள் போலவும், குட்டையாகவும் நெட்டையாகவும், சின்னஞ்சிறு இலைகளை அடர்த்தியாகக் கொண்டும், கொடி போன்றும், தேயிலைச் செடிபோன்றும், பெரிய இலைகளைக் கொண்டும் உள்ள செடிகளிலே மொக்கு விட்டு மலரும். ஒவ்வொன்றிற்கும் தனித் தனிப் பெயர் உண்டு. சில, அதனதன் செடியின் பெயராலும், இன்னும் சில, அவற்றைப் பயிராக்கியவரின் பெயராலும், வேறு சில, அவை கோணரப்பட்ட நாட்டின் பெயராலும் வழங்கப்படும். உதாரணமாக, பாரசீகத்திலிருந்தும் டமாஸ்கஸிலிருந்தும் வந்தமையால் முறையே, பர்ஸியன்

ரோஸ், டமாஸ்கஸ் ரோஸ் என இருவகை நிலவி வருகின்றன. எட்வர்ட் ரோஸ் என்பதற்கு எட்வர்ட் சக்கரவர்த்தி விரும்பி அணிந்து வந்த காரணத்தால் அப்பெயர் வந்தது. அல்லது எட்வர்ட் என்பவரால் பயிராக்கப் பட்ட காரணத்தாலும் இருக்கலாம். இவ்விதமே தேயிலைச் செடி போன்ற செடியில் மலர்வதற்கு டீ ரோஸ் (Tea Rose) ஹைப்ரிட் டீ ரோஸ் (Hybrid tea rose) என்றெல்லாம் பெயர் வழங்கி வருகிறது. கஸ்தூரி மணம் கமழும் ரோஜாவை, கஸ்தூரி ரோஜா என்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. ரோஜா (மங்கையை)வைத் திருடும் கள்ளனிடமிருந்து காப்பாற்ற அவள் அன்னை (செடி) தன் முள் கொண்டு அவனை எதிர்ப்பாள் என்பதையும் கூறத் தேவையில்லையே!

பயிராகும் இடங்கள்

இந்தியாவிலே வட நாட்டிலே தான் ரோஜா ஏராளமாகப் பயிராகிறது. உத்திரப் பிரதேசத்தில் காஜிப்பூர், சிகந்தர்பூர், கான்பூர், ப்வைஸாபாத், அலகாபாத், கனோஜ் ஆகிய இடங்களிலும், மற்றும் ஹத்ராஸ், மீரட், ஸஹரான்பூர், டெராடூன், முஸ்ஸோரி ஆகிய இடங்களில் சர்க்கார் ரோஜாத் தோட்டங்களும் தனியார்களின் தோட்டங்களும் இருக்கின்றன,

பீஹாரில், தேவ்கர், மதுப்பூர், மிஹிஜாம் ஆகிய பெரிய நகர்களிலே ரோஜா மலர்கள் நிறைய விற்பனையாகின்றன.

வங்கத்திலே கல்கத்தாவிலும், டார்ஜிலிங்கிலும், சிக்கிமிலுமாக பெரும்பாலும் எட்வர்ட் ரோஜாவே கணக்கின்றிப் பயிராகின்றன. மற்றவை அழகு அலங்கார வகைகளைச் சேர்ந்தவை.

தென்னாட்டிலே சென்னை, செங்கல்பட்டு, வட ஆர்க்காடு, தஞ்சை, திருச்சி, கோவை, மதுரை முதலிய மாவட்டங்களில் எட்வர்ட் ரோஜாக்கள் (ரோஜாப்பூ) அகப்படுகின்றன. சென்னையில் ஏராளமாகக் கிடைப்பது எட்வர்ட் ரோஜா. திருச்சியிலும், மதுரையிலும் பட்டு ரோஜா அகப்படுகிறது. அதிலே வாசனை கிடையாது.

மைசூரிலும், உதகமண்டலம், கோடைக்கானல் போன்ற குன்றுகளை அடுத்த பல ஊர்களிலும் பலவகை ரோஜாக்கள் பயிராகின்றன. தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த ராஜமன்னார்குடியில் நிறைய ரோஜாத் தோட்டங்கள் இருக்கின்றன. அங்கிருந்தே ரோஜாக்கள் - ஏன், ரோஜா பதியன்கள் பிற இடங்களுக்கு அனுப்பப்படுகின்றன. இந்தக் காரணத்தால் ராஜமன்னார்குடியை ரோஜா மன்னார்குடி என்று சொன்னால் என்ன! கஸ்தூரி ரோஜா இமயத்தின் மலைச்சாரலிலே ஏராளமாகப் பயிராகின்றன.

ரோஜா பொருள்கள் உபயோகங்கள்

உலகில் மிகப் பிரசித்தமான வாசனைப் பொருள்கள் (கன-திரவ பதார்த்தங்கள்) எல்லாவற்றிலும் ரோஜா எண்ணெய் சேர்க்கப்பட்டிருக்கிறது. குளிப்பதற்கு உபயோகிக்கும் சோப்புகள், முகப் பவுடர்கள், அங்கிகள், ஆடைகள், கைக்குட்டைகள் ஆகியவற்றிலே தடவிக்கொள்ளவோ தெளிக்கவோ உபயோகமாகும் சென்ட் (Sent) வாசனைத் திரவகம் வகைகள் முதலியவற்றை உதாரணமாகக் கூறலாம். புகையிலையிலும், சந்தனத்திலும் ரோஜா அத்தர் சேர்க்கப்படுகிறது. ரோஸ் வாட்டர் என்ற பன்னீரைப் பற்றியும், குல்கந்தைப் பற்றியும் எல்லோருக்கும் தெரியும். குல்ரோகான் (Gulroghan) என்னும் கூந்தல் தைலமும் தயாரிக்கப்படுகிறது. இம் மூன்றும் வட நாட்டிலே தான் முக்கியமாக உத்திரப் பிரதேசத்தில் நிறைய உற்பத்தி செய்யப்பட்டு வருகின்றன. உலர்ந்த ரோஜா இதழ்கள் பேதிக்கு நல் மருந்து. ரோஜா மொட்டிலே துவர்ப்பு இருப்பதை அனைவரும் அறிவீர். ஆகவே, ரோஜாச் சாரம் கலந்த ஒவ்வொரு வாசனைப் பொருளும், மாதரின் மேனியை அழகு செய்துகொள்ளவும் மணமுள்ளதாக்கவும் பெரிதும் உபயோகமாகிறது. பன்னீர் குளுமைச் சரக்கு. அதனைச் சந்தனத்திலே கலந்து உடம்பிலே பூசிக் கொள்கிறோம். உடல் உஷ்ண மிகுதியால் கண்கள் பொங்கினால் பன்னீர்த் துளிகள் அதற்கேற்ற மருந்தாகிறது. விருந்துகள், விழாக்கள், கல்யாணங்கள் ஆகியவற்றின்போது மக்கள் மீது பன்னீர் தெளிக்கிறோம். அதன் வாசனை மூலம் அனைவர் உள்ளமும் மகிழ்ச்சி கொள்கிறது. உடலும் குளிர்ச்சி அடைகிறது. இனிப்புப் பண்டங்களிலும் பன்னீர் சேர்க்கப்பட்டு வருவது எல்லோரும் அறிந்ததே. குல்கந்து குளுமை கொடுப்பது. அஸ்திச் சூட்டைத் தணித்து பலமும் அளிக்கும் தன்மையது. குல்ரோகான் தைலம் கூந்தலை வளர்ப்பதோடு கண்களுக்குக் குளிர்ச்சி தந்து, மூளைக்கும் நலன் அளிக்கும்.

பன்னீர், அத்தர் இவற்றின் தொன்மை

கி. பி. 8–9-ம் நூற்றாண்டிலே நாகார்ஜுனன் பன்னீர் செய்யும் முறையை முதன் முதலில் கண்டு பிடித்தார். பன்னீர் வடித்தல், மிகப் பழங்காலத்திலிருந்தே பாரசீகம், கிரீஸ், ரோம் ஆகிய நாடுகளில் பழக்கத்தில் இருந்து வந்ததாம். அந் நாடுகளிலே சவங்களை துர் நாற்றம் அடையாமல் வைத்திருக்க அவற்றின் மேல் ரோஜா எண்ணெயை (அத்தர்) கொழுப்போடு கலந்து நன்றாக மெழுகி விடுவார்களாம். ஒவ்வொரு வருடமும், ரோமர்களும், கிரேக்கர்களும் ரோஜா மலர் விழா நடத்துவார்கள். கல்லறைகளை ரோஜாக்களால் அலங்காரம் செய்வார்கள்.

ரோஜா எண்ணெயையும் அவற்றின் மேல் பூசிவிடுவார்கள்.

கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே பாரசீகத்திலே முதன் முதலாகப் பன்னீர் தயாரிக்கப்பட்டு வந்ததென்று அராபிய சரித்திராசிரியர் இப்ன்கால்துன் கூறுகிறார். 10-ம் நூற்றாண்டிலே இந்த முறை அராபியர்கள் மூலமாகவே ஐரோப்பாவில் பரவத் தொடங்கிற்று. பிற வாசனைப் பொருள்களும் இங்கிலாந்துக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன.

கி.பி. 810-17-ல் காலிப்வ் மாமொன் ஆட்சியிலே பாரிஸ்தானிலிருந்து 30000 பாத்தல்கள் பன்னீர் பாக்தாது கஜானாவில் கப்பமாகச் செலுத்தப்பட்டு வந்தது. அங்கிருந்து சைனா, இந்தியா, எகிப்து, ஸ்பெயின், மொராக்கோ முதலிய நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப்பட்டது. பன்னீர் செய்யும் முறை முதன் முதலில் பாரஸீகத்திலிருந்து பாஸ்ரா அரேபியா வழியாக இந்தியாவில் கனோஜ் வந்தது. பிறகே காஜிப்பூர் சென்றது என்றெல்லாம் இப்ன்கால்துன் கூறுகிறார்.

பல முகம்மதிய பாதுஷாக்கள் மூலமாகவே பாரஸீக ரோஜாக்கள் இந்தியாவிற்குக் கொணரப்பட்டு, பயிர் செய்யப்பட்டும் வந்தது. கி. பி. 1351-8-ல் ப்வெரோஜ் ஷா காலத்திலே ப்வெரோஜாபாத் (இப்பொழுதிருக்கும் தில்லியில்) 100 ரோஜாத் தோட்டங்கள் இருந்தனவாம். ஆனால் அவற்றில் இப்பொழுது ஒன்றைக் கூடக் காண முடியவில்லை! பின்னர் பாபர் காலத்திலே மறுபடியும் ரோஜாத் தோட்டங்கள் போடப்பட்டன. ரோஜா மூலம் வாசனைப் பொருள் தயாரிக்கும் தொழிலும் தொடக்கம் பெற்று பிரபலமாகி வந்தது. பாபரின் நினைவு மொழி நூலில் பல வகை மலர்கள்-தோட்டங்கள் பற்றிய குறிப்புகள் நிறையக் காணப்படுகின்றனவாம்.

பன்னீர் வடித்தல்

ஸ்டில் என்னும் திரவம் வடிக்கும் கொப்பரை மூலம் பன்னீர் உற்பத்தி செய்வது பழங்கால முறை. இதுவே பல இடங்களிலும் கையாளப்பட்டு வருகிறது. இன்னும் சில நூதன முறைகள் உள. பழைய சாதாரண நேர் நெருப்பு மூலம் தயாரிக்கும் முறை கனோஜ், பர்வானா, காஜிப்பூர் முதலிய இடங்களில் பழக்கத்தில் இருந்து வருகிறது.

கனோஜில் சுமார் 50 வாசனைப் பொருள்கள் உற்பத்தி செய்யும் கம்பெனிகள் உள. அவற்றுள் ரோஜாச்சாரங்கள் வடிக்கும் மிகப் பழமையான பிரபல கம்பெனி மாக்குலால் அயோத்யா பிரஸாத் 1818-ல் நிறுவப்பட்டது. இக்கம்பெனியும் பிறவும் இந்தியா முழுதும் ரோஜாப் பொருள்களை ஏஜெண்டுகள் மூலம் வியாபாரம் செய்து வருகின்றன. சில கம்பெனிகள் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்கின்றன.

இதர் - ஜஹாங்கீர் அத்தர் செய்யும் முறை

அத்தர் கண்டுபிடிக்கப்பட்ட விவரம் பற்றிய சம்பவம் ஒன்றை ஜஹாங்கீர் தமது நூலில் கூறு கிருர். ஒரு முறை நூர்ஜஹானின் அன்னை பன்னீர் தயாரித்து வந்தாள். சூடான பன்னீரை தட்டொன்றில் வார்த்து வருகையில் தட்டின் விளிம்பிலே வெண்ணெய் (Scum) போன்ற பொருள் ஒட்டிக்கொண்டிருந்ததைக் கண்டாள். உடனே அதனை விரலால் தொட்டு முகர்ந்து பார்த்தபோது, அதிலிருந்து எழுந்த மணம் மூக்கைத் துளைத்தது. பிறகு அந்த அம்மாள் அவற்றையெல்லாம் திரட்டி எடுத்து போத்தலில் அடைத்து இறுக மூடி வைத்தாள். அச்சிறிதளவு பொருளிடமிருந்து கமழ்ந்த வாசனையை, ரோஜா மலர்கள் நிறைந்த தோட்டத்தின் நடுவில் இருக்கையில் ஒருவர் நுகரும் நறுமணத்திற்கு ஒப்பாகச் சொல்லலாம். அதன் பிறகே அத்தர் உற்பத்தி செய்யத் தொடங்கப்பட்டதாம். ஜஹாங்கீர் அந்த அம்மாளுக்குப் பரிசாக ஓர் முத்து மாலையை வழங்கியதோடு கண்டுபிடிக்கப்பட்ட பொருளுக்கு இதர் — ஜஹாங்கீர் என்று பெயர் இட்டாராம்.

பன்னீர் வடிக்கு முன், ரிஸீவரில் (ஏற்கும் பாத்திரம்) பாதி அளவுக்கு சந்தன எண்ணெய் நிரப்பிவிடவேண்டும். பன்னீர் வடிக்கப்பட்டு வருகையில், ரோஜா மணத்தைச் சந்தன எண்ணெய் ஏற்றுக் கொள்ளும். ரோஜாச் சாரம் கலந்த சந்தன எண்ணெய் நீரில் மிதக்கும். அதனை ஓர் பாத்திரத்தில் சேகரித்து வைப்பார்கள். பாத்திரத்தின் அடிப்பாகத்துக் குறுகிய இடைவெளி மூலமாக நீரை வெளியேற்றிவிட்டு, அத்தரை மட்டும் நன்கு மூடிவைப்பார்கள். அத்தர் தயாரிக்கும் முறை இது.

ரோஜா எண்ணெய்

டமாஸ்க் ரோஜாக்கள் மூலம் பன்னீரை அகண்ட ஆழமற்ற மண் பாண்டங்கள் அல்லது வெண்கலப் பாத்திரங்களில் நிரப்பி அவற்றை குளிர் காற்றுப் படும்படியாக இரவில் மொட்டை மாடியிலே திறந்தவாறு வைத்து, அவற்றின் மேல் தூசு - புழுதி ஒன்றும் விழாவண்ணம், தூய்மையான மஸ்லின் துணியால் மூடி விடுவார்கள். மறுநாட் காலையில், துணியைத் திறந்து பார்த்தால் பாண்டத்துப் பன்னீர் மேல் வெண்ணெய் போன்ற பதார்த்தம் மிதக்கும். அதனை கிளிஞ்சல் அல்லது இறகின் உதவியால் எடுத்து போத்தல்களில் சேகரம் செய்து வைப்பார்கள்.

குல்கந்து

ரோஜா இதழ்களை சம அளவு சர்க்கரையோடு சேர்த்து ஓர் பதம் வரும் வரை நன்ருகப் பிசைந்து ஊற வைப்பதின் மூலம் கிடைப்பது குல்கந்து. கனோஜ், சிகந்தர் பூர், சென்னை, மைசூர் முதலிய

இடங்களிலே எட்வர்ட் ரோஸ் (ரோஜாப்பூ) மூலம் குல்கந்து தயாரிக்கப்பட்டு வருகிறது.

அப்வ்டபி-குல்ரோகான்

பச்சை எண்ணெயும் ரோஜா இதழ்களையும் சேர்த்து செக்கி விட்டு ஆட்டி எடுக்கப்படும் கூந் தல் தைலம் இது. அப்வ்டபி (Aftabi) குல்ரோகான் – நல் லெண்ணெயில் ரோஜா இதழ்களை நன்றாக ஊற வைத்த பிறகு, இதழ்களிலிருந்து பிழிந்தெடுக்கப் படும் ரோஜா கூந்தல் வளரும் தைலமாகும்.

பன்குரி சர்பத்

கோடைக் காலத்திலே உலர்ந்த ரோஜா இதழ்கள் மூலம் தயாரிக் கப்படும் ஓர் வகை குளிர்ந்த பானம்.

சென்ட்டும் தைலமும்

வடித்து எடுத்த ரோஜா சாரத்தை - அத்தரை ஸ்பிரிட் டோடு ஓர் முறைப்படி கலந்து சென்ட் தயாரிக்கப்படுகிறது. சிறிதும் மணமற்ற ஓர் வகை வெண்மையான எண்ணெயில் ரோஜாச் சாரத்தை – அத்தரை ஏற்ற முறையில் கலந்தே ரோஜாத் தைலம் தயாரிக்கப்படுகிறது. இவ் விதமே மல்லிகைச் சாரத்தை இவ் வெண்ணெயில் கலந்து மல்லிகைத் தைலமும் மற்றும் பலவும் தயா ரிக்கப்படுகின்றன. இது ஓர் வகை.

பிற நாடுகளில்

ரோஜா பயிரிடுதல், ரோஜாப் பொருள்கள் உற்பத்தி செய்தல் இவையிரண்டும் கி. பி. 1680 லிருந்தே பல்கேரியாவில் மிகச் சிறந்த முறையில் நடைபெற்று வருகின்றன. பால்கன் மலைத் தென் சரிவுகளுக்கு ரோஜாப் பள் ளத் தாக்கு (Valley Roses) எனப் பெயர் வழங்கி வருவதி லிருந்தே, அங்கு இயங்கி வரும் இத் தொழில்களின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறதல்லவா?

பல்கேரியா வாசனைப் பொருள் கள் உலகப் பிரசித்தமாயிற்றே.

இதற்கு அடுத்தபடியாக பிரான் சைச் சொல்லலாம். பாரிஸ் சென்ட்டுகள், பாரில் எப்படிப் புகழ் பெற்று விளங்குகின்றன என்பதைச் சொல்லவே வேண் டாம். இப்படியாக ஜெர்மனி, இத்தாலி, மொராக்கோ, துருக்கி, ஆஸ்திரேலியா, அமெரிக்கா, ருஷியா ஆகிய நாடுகளிலும் இத் தொழில்கள் வளர்ந்து வருகின் றன.

நியூதில்லி விஞ்ஞான, தொழில் ஆராய்ச்சி ஆலோசனை சபையார் ரோஜா வளர்ப்பும் – ரோஜாப் பொருள்களும் பற்றிய பல நுணுக்கங்களை விரித்துரைக்கும் நூல் ஒன்று வெளியிட்டிருக்கின் றனர். படித்துப் பார்க்கின் பலன் பெறுவது உறுதி.

இறுதியில் ஒரு வார்த்தை

இந்தியா ஆண்டொன்றுக்கு ஆயிரக் கணக்கான ரூபாய்ச் செல

வில் அந்நிய நாடுகளிலிருந்து வாசனைப் பொருள்களைத் தருவித்து வந்தது — வருகிறது. அவற்றை நம் நாட்டிலேயே உற்பத்தி செய்தால் எவ்வளவு பணம் லாபம்? இந்த வகையிலே மத்திய சர்க்கார் மேற்கூறிய சபை மூலம் ஆராய்ந்து வருவது பொருத்தமானதே. எனினும் தமிழ் நாட்டிலே ஏராளமான ரோஜா மலர்களை, மாலைகளிலும், அருச்சனை செய்வதிலுமாக செலவிடுகிறோம். அபரிமிதமாக அம்மலர்கள் நமக்குக் கிடைத்தும், பன்னீர், அத்தர் போன்ற வாசனைப் பொருள்களுக்கு வடநாட்டை எதிர்பார்க்கிறோம். நம்மிடம் நிறைய மலர்கள் இருக்கின்றன. பணமிருக்கிறது, உழைக்க விஞ்ஞானம் பயின்ற இளைஞர்களும் இருக்கின்றனர்; ஆதலால் நாம் ஏன் ரோஜாப் பொருள்கள் உற்பத்தி செய்யக் கூடாது? சென்னை அரசாங்க விவசாய இலாகா இந்த விஷயத்தில் கவனம் செலுத்தி, ஏற்ற அளவுக்கு ரோஜாக்களைப் பயிரிட்டு, வாசனைப் பொருள்களையும் உற்பத்தி செய்து, அவற்றைப் பிற இடங்களுக்கு விற்பனை விநியோகம் செய்வதிலும் ஈடுபட்டால் விளைவது பொருள் வருமானம். பலருக்கு வேலையும் கிடைக்கும்.

—"தின மணி சுடர்"

"ஆரம்பக் கல்வி" ஆபீஸ்

94–95, புதுத்தெரு,
மண்ணடி, சென்னை-1.

*

மாதாந்திரக் கணக்கு அனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 3-50

ரிக்கார்ட் ஷீட்டுகள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பிராவிடண்ட் பண்டு கட்டும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2-50

பள்ளியில் பிள்ளைகளைச் சேர்க்கும் விண்ணப்பத் தாள்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 1–25

வருடாந்திர பிராவிடண்ட் பண்டு சரிபார்த்தனுப்பும் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

Form of Certificate of Income
வருமான நற்சாட்சிப் பாரங்கள் (ஆங்கிலம்) 100 ரூ. 2–50

தபால் செலவு பிரத்யேகம்

*

முக்கிய அறிவிப்பு

Book Post-ல் அனுப்ப 25 பாரங்களுக்கு தபால் செலவு 14 n. p. 50 பாரங்களுக்கு 26 n.p. 75 பாரங்களுக்கு 41 n. p. 100 பாரங்களுக்கு 50 n. p.

வேண்டிய பாரங்களுக்கு தபால் செலவு சேர்த்து முன் பணத்துடன் ஆர்டர் அனுப்பவும்.

தமிழ் நூல்கள் எவ்வாறு மறைந்தன?

(மயிலை - சீனி. வேங்கடசாமி.)

தமிழ் இலக்கியக் குடும்பத்தில் எத்தனை எத்தனையோ குழந்தைகள் தோன்றின. அவற்றுள் பல அரிய தமிழ் நூல்கள் வருந்தத் தக்க நிலையிலே மறைந்து போயின. உரையாசிரியர்களின் மேற்கோள்களினால், சில நூல்களின் சிற்சில பாட்டுக்களைமட்டும் இன்று நம்மால் அறியமுடிகிறது. உரையாசிரியர்களாலும், மற்றவர்களாலும் குறிப்பிடப்படாமலே, பெயர்கூடத் தெரியாமலே, மறைந்துபோன நூல்கள் எத்தனையோ அறியோம்!

இவ்வாறு நூல்கள் மறைந்து போனதற்குக் காரணம் என்ன என்பதைப் பார்ப்போம். தலைச் சங்க இடைச்சங்க காலத்தில், பாண்டி நாட்டின் தென்பகுதியில் இருந்த சில நிலப்பகுதிகள் இரண்டு பெரிய கடற்கோள்களினால் மறைந்துவிட்டன. அப்போது அப்பகுதியில் இருந்த ஏட்டுச் சுவடிகளும் மறைந்து போயின.

ஆனால், அதன் பிறகு உண்டான பல நூல்களும் மறைந்து போனதைக் காண்கிறோம். இவை மறைந்து போனமைக்குக் கடற்கோள்கள் காரணம் அல்ல; வேறு காரணங்களால் இவை மறைந்தன. அக்காலத்தில் அச்சுப் புத்தகங்கள் இல்லாதது, பல நூல்கள் மறைந்துபோனதற்கு முக்கிய காரணமாகும். அச்சுப் புத்தகங்கள் அக்காலத்தில் இருந்திருந்தால், அப் புத்தகங்களின் பிரதிகள் பலரிடத்தில் பல ஊர்களில் இருந்திருக்கும். அப்போது, சில இடங்களில் உள்ள புத்தகங்கள் அழிந்து போனாலும் வேறு இடங்களில் அந்தப் பிரதிகள் இருந்து, அந் நூல் மறைந்து போகாமல் பாதுகாக்கப்பட்டிருக்கும். அச்சுப் புத்தகங்கள் இல்லாத அக்காலத்தில், நூலின் பிரதிகள், மிகச் சிலவே இருந்தன. அச் சில பிரதிகள் நீர், நெருப்பு, சிதல் முதலிய காரணங்களால் அழிந்துவிடுமானால் அந் நூல்கள் அடியோடு அழிந்து போகின்றன. இவ்வாறு மறைந்துபோன நூல்கள் பல.

சமயப் பகை

சமயப் பகை காரணமாகவும் பல ஏட்டுச் சுவடிகள் மறைந்து போயின. நமது நாட்டிலே, முற்காலத்தில் செழித்துப் பரவியிருந்த பௌத்த ஜைன மதங்கள் பல சமய நூல்களைக் கொண்டிருந்தன. அந்த மதங்கள் பிற்காலத்தில் குன்றிப்போய் மறைந்தபோது, அச் சமய நூல்களும் மறைந்துபோயின. ஆதரிப்போர் இருந்தால்தானே அவை வாழ்ந்திருக்க முடியும்? அவ்

மதங்கள் மறைந்த காரணத்தினால் ஆதரிப்போர் இல்லாமல், அந்நூல்கள் மறைந்து போயின. அம்மதத்தவர் அல்லாத ஏனைய மதத்தார், சமயப் பகை காரணமாக அந்த மத நூல்களைப் போற்றாமல் விட்டனர்.

குண்டலகேசி, விம்பசாரகதை, சித்தாந்தத் தொகை, திருப்பதிகம், புத்த ஜாதகக் கதைகள் முதலிய பௌத்த நூல்களும், ஜைன இராமாயணம், வளையாபதி, கிளி விருத்தம், எலி விருத்தம், சாந்தி புராணம், மல்லிநாதர் புராணம், நாரத சரிதை, பிங்கல கதை, வாமனகதை, பிங்கலகேசி, அஞ்சனகேசி, காலகேசி, தத்துவ தரிசனம் முதலிய ஜைன சமய நூல்களும் இவ்வாறு மறைந்து போன நூல்களாம். மணிமேகலை, சிலப்பதிகாரம், சிந்தாமணி போன்ற பௌத்த சமண சமயக் காவியங்களைச் சைவ வைணவ சமயதார் போற்றிக் காப்பாற்றியதன் காரணம், அவை இலக்கிய வளம்படைத்த காவியங்கள் என்னும் காரணம் பற்றியே. இவ்வாறு ஒரு சில பௌத்த சமண சமய நூல்கள், அவற்றின் இலக்கியச் சிறப்புப் பற்றிப் போற்றிக் காப்பாற்றப்பட்டன என்றாலும், பௌத்த ஜைன சமயங்களின் ஏனைய நூல்கள் எல்லாம் மறைந்து போயின.

மூடக் கொள்கை

சமயப் பகைமையினால் சிலபல நூல்கள் அழிந்தது போலவே, மூடக் கொள்கையினாலும் பல நூல்கள் அழிந்தன. பதினெட்டாம் பெருக்கு, கலைமகள் விழாவாகிய சரசுவதி பூஜை, மாசிமகம் போன்ற காலங்களில் ஏட்டுச் சுவடிகளைக் கடலிலும், ஆற்று வெள்ளத்திலும் போடுகிற வழக்கம் இருந்தது. பிற்காலத்தில் ஏற்பட்ட இந்த மூட வழக்கம் சமீப காலம் வரையிலும் இருந்தது. கல்வி அறிவில்லாதவர்கள், தங்கள் வீடுகளில் தமது முன்னோர் சேமித்து வைத்த ஏட்டுச் சுவடிகளைக் கற்கும் ஆற்றல் இல்லாமல், அச் சுவடிகளை ஆற்று வெள்ளத்தில் விட்டனர். இது போன்ற மூடத்தனம் உலகத்திலே எந்நாட்டிலும் காணமுடியாது. சிலர் ஏட்டுச் சுவடிகளை அடுப்பில் இட்டு எரித்ததும் உண்டு. குரங்கு கையில் பூமாலை கிடைத்தாற்போல, கல்வியறிவற்றவர் கையில் கிடைத்த ஏட்டுச் சுவடிகள் இவ்வாறு அழிந்தன.

வித்துவான் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் அக் குடும்பத்தில் உள்ள பொருள்களையும் சொத்துக்களையும் பாகம் செய்துகொள்ளும்போது, ஏட்டுச் சுவடிகளையும் பங்கிட்டுக் கொள்வது வழக்கம். பங்கிட்டுக் கொண்டவர்களில் கல்வி அறிவில்லாதவர்களும் இருப்பார்கள். படிக்கத் தெரியாமல் இருந்தாலும், சுவடிகளிலும் பங்கு கேட்டு வாங்குவார்கள். அவர்களிடம் சென்ற ஏடுகளின் கதி யாது? பதினெட்டாம் பெருக்குக்கும், அடுப்புக்கும், சிதலுக்கும் அவை இரையாகிவிடும்.

அதிவீரராம பாண்டியனின் புத்தகசாலையில் இருந்த ஏட்டுச் சுவடிகள், பிற்காலத்தில் கோவில் அதிகாரிகளால் தீயில் இட்டுக் கொளுத்தப்பட்டனவாம்! மதுரைத் தமிழ்ச் சங்கப் புத்தகசாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த ஏட்டுச் சுவடிகள் சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன்பு தீப்பிடித்து எரிந்து போயின. அதில், அச்சில் வராத சிலபல ஏட்டுச் சுவடிகளும் இருந்தனவாம். திருக்குறளின் பத்து உரைகளும் அதில் இருந்ததாகக் கூறப்படுகிறது. வேறு அருமையான நூல்களும் இருந்தனவாம்.

செல் அரித்தல்

நமது நாட்டுக்குச் சாபக்கேடாக இயற்கையில் அமைந்துள்ள சிதல் என்னும் பூச்சிகள், ஏட்டுச் சுவடிகளுக்குப் பெரும் பகையாக இருக்கின்றன. வன்மீகம் என்றும், செல் என்றும் பெயர்பெற்ற எறும்பு இனத்தைச் சேர்ந்த இப்பூச்சிகள், துணிமணிகள், மரச்சாமான்கள் முதலியவற்றை அரித்து விடுவது போலவே, ஏட்டுச் சுவடிகளையும் தின்று அழித்துவிட்டன. இப்படி அழித்த சுவடிகளுக்குக் கணக்கில்லை. அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூன்று சிவனடியார்கள் இயற்றிய தேவாரப் பதிகங்களில் நூறுயிரப் பதிகங்களுக்கு மேல் செல்லரித்துவிட்டன. இப்போதுள்ள தேவாரப் பாடல்கள் அவற்றில் எஞ்சி நின்ற சிறு பகுதியே.

தேவாரப் பதிகங்கள் எழுதிய ஏட்டுச் சுவடிகள், தில்லைச் சிற்றம்பலத்திலே ஓர் அறையிலே வைக்கப்பட்டிருந்ததை அநபாய சோழ மகாராசன் அறிந்து, அவ்வேடுகளை எடுக்கச் சென்றான். சென்று அறையின் கதவைத் திறந்து பார்த்தபோது வன்மீகம் (சிதல்) அரித்து மண்மூடிக் கிடப்பதைக் கண்டு திடுக்கிட்டு மனம் வருந்தினான், பிறகு, குடங்குடமாக எண்ணெயை ஊற்றிக் கிளறிப் பார்த்தபோது சில ஏடுகள்மட்டும் எஞ்சியிருந்தன. இவ்வாறு எஞ்சி நின்ற பகுதிதான் இப்போதுள்ள தேவாரப் பதிகங்கள். தேவாரத்தின் பெரும்பகுதிகள் மறைந்து போயின. தேவாரப் பதிகங்களைச் சிதல் தின்ற செய்தியைத் திருமுறை கண்ட புராணம் கூறுகிறது.

இவ்வாறு செல்லரித்து அழிந்து போன நூல்கள் இன்னும் பலப் பல. இக் கறையான்கள் இன்னும் தமது அழிவு வேலைகளைச் செய்துகொண்டு தான் இருக்கின்றன.

அயலார் படையெடுப்பு

அரசர்களின் போரினாலும் புத்தக சாலைகள் அழிக்கப்பட்டு அருமையான நூல்கள் மறைந்து போய்விட்டன. சேர சோழ பாண்டிய அரசர்கள் தமது அரண்மனைகளில் நூல் நிலையங்களை அமைத்திருந்தனர். அவர்களுக்குள் அடிக்கடி போர்கள் நிகழ்ந்தன. அப்போர்களில், ஒருவர் நகரத்தை மற்றவர் கைப்பற்றிய

தும் உண்டு. ஆனால், அவர்களினால் நூல் நிலையங்கள் அழிக்கப்படவில்லை. ஏனென்றால், அவர்கள் தமிழர்கள். தமிழரசர்கள் தமிழ் நூல்நிலையங்களை அழிப்பது மரபல்ல, மாறாகப் போற்றினார்கள்.

தமிழரல்லாத வேற்றரசர்கள், தமிழ் நாட்டில் வந்து போர் செய்து அரசைக் கைப்பற்றிய காலத்தில் தமிழ் நூல் நிலையங்கள் கவனிக்கப்படாமல் மறைந்தன. விஜயநகர அரசரால் அனுப்பப்பட்டு, தமிழ் நாட்டைப் பிற்காலத்தில் அரசாண்ட நாயக்க மன்னர்கள் பாண்டிய நாட்டையும், சோழ நாட்டையும் அரசாண்டனர். அவர்கள், சமயங்களையும் சமயப் புலவர்களையும் போற்றினார்களே தவிர தமிழ் மொழிப் புலவரைப் போற்றவில்லை; பழைய தமிழ் நூல்நிலையங்களையும் போற்றவில்லை. பாண்டிய சோழ அரசர்களின் புத்தக நிலையங்கள் என்னவாயின என்று தெரியவில்லை.

பிற்காலத்தில் தஞ்சாவூரை அரசாண்ட மராட்டிய அரசர்களும் பழந் தமிழ் நூல்களைப் போற்றினார்கள் என்று கூறமுடியாது. சரஸ்வதி மகால் புத்தகசாலையில் சில தமிழ் நூல்களும் இருந்தன என்றாலும் முக்கியமான சிறந்த தமிழ் நூல்கள் அங்கு இருந்ததாகத் தெரியவில்லை.

இலங்கையில், யாழ்ப்பாணத்தை ஆரியச் சக்கரவர்த்திகள் என்னும் பெயருடன் அரசாண்ட மன்னர்கள் தமிழர்கள். அவர்கள் பாண்டிய மன்னரின் தொடர்புடையவர்கள். யாழ்ப்பாணத்தில் இவ்வரசர்கள் தமிழ்ச்சங்கங்கள் வைத்து தமிழ் வளர்த்தார்கள். சரஸ்வதி மகாலயம் என்னும் புத்தகசாலையையும் வைத்திருந்தார்கள். பிற்காலத்தில், சிங்கள மன்னன் இம் மன்னர்களுடன் போர் செய்தபோது யாழ்ப்பாணத்திலிருந்த இந்தப் புத்தகசாலையை அழித்துவிட்டான். அவன் தமிழனல்லாத சிங்களவன் ஆகையால் தமிழ் நூல்களை அழிப்பது பற்றி அவன் கவலைப்படவில்லை.

சேரநாடு பிற்காலத்தில் கி. பி. 16-ஆம் நூற்றாண்டில் மலையாள மொழியுள்ள நாடாக மாறியது. ஆகவே சேர அரசர்களும் மலையாள மொழியைப் போற்றினார்கள். தமிழ் நூல்களைப்பற்றி அவர்கள் கவலைப்படவில்லை. ஆகவே சேரநாட்டுத் தமிழ் நூல்கள் போற்றுவார் அற்றுப் பையப் பைய மறைந்து போயின.

தமிழ் நாட்டிலே கி. பி. 17, 18-ஆம் நூற்றாண்டுகளில் அரசியல் நிலை மிக மோசமாய்விட்டது. மத ஒற்றுமை இல்லாத வேற்று மதக்காரர்களும் வேற்று மொழிக்காரர்களும் நமது நாட்டிலே வந்து அரசியல் குழப்பங்களையும் போர்களையும் உண்டாக்கி நாட்டின் அமைதியைக் கெடுத்துப் பாதுகாப்பை அழித்தனர். அந்தக் காலத்தில்தான் பெரும்பான்மையான பழைய நூல்கள்

அழிந்து மறைந்தன. உயிருக்கும் பொருளுக்கும் பாதுகாப்பில்லாமல் அல்லாடிக்கொண்டிருந்த மக்கள், நூல்களைப் போற்றி வைப்பதில் எவ்வாறு கவலை கொள்ள முடியும்? சமயப் பகைமைகளுக்கும் செல்லுக்கும் சிதலுக்கும் உயிர் தப்பி எஞ்சியிருந்த அருமையான சில நூல்கள் 17, 18-ம் நூற்றாண்டுகளில் நிகழ்ந்த அரசியல் குழப்பத்திலே பெரிதும் மறைந்துவிட்டன.

இவ்வாறு சில முக்கிய காரணங்களினாலே பல தமிழ் நூல்கள் மறைந்துபோயின. எத்தனை நூல்கள் மறைந்து போயின என்பதைக் கணக்கிட முடியாது. உரையாசிரியர்களும் நூலாசிரியர்களும் சாசனங்களும் குறிப்பிட்டுள்ள மறைந்துபோன நூல்களைப்பற்றித்தான் அறிய முடியும். குறிப்பிடப்படாமல் மறைந்துபோன நூல்களை நாம் அறிவதற்கு வழியில்லை.

இப்பொழுதுங்கூட சில நூல்கள் ஏட்டுப் பிரதிகளாகவே உள்ளன. அவைகளை விரைவில் அச்சிட்டு வெளிப்படுத்தாவிட்டால் அவையும் மறைந்துவிடும் என்பதில் ஐயமில்லை. ஆட்சியாளரும் நாட்டவரும் இதில் கருத்துச்செலுத்தி ஆவன செய்வார்களாக.

— "பாரதி."

அறிவுச் சுடர்கள்

சுயேச்சையாய் இரு. எவர் கருத்தையும் அப்படியே ஏற்காதே. குருட்டுத்தனமாக எவர் வழியிலும் செல்லாதே. அதைவிடக் கழுதையாய்ப் புழுவாய் நாற்காலியாய் உயிரற்ற பொருளாய் இருப்பது நல்லது.

— வில்லியம் பிளேக்

எந்த அரசாங்கத் தலைவன், பிறர் வீசும் பழிகளுக்கு அஞ்சி, மக்களுக்குச் செய்ய வேண்டிய கடமைகளைச் செய்யாமல் கொலுப் பொம்மையாக இருந்து காலத்தை ஓட்டுகிறானோ அவனைவிடத் துரோகி வேறு கிடையாது.

— சொபோக்ளஸ்

வாழ்க்கையோ சிறியது. அதில் கிடைக்கும் அமைதியான நேரம் மிகவும் சிறியது. அத்தகைய பொன்னான நேரத்தைப் பயனற்ற புத்தகங்களைப் படிப்பதில பாழாக்கிவிடாதே! எப்போது படித்தாலும் பயன்மிக்க பண்புள்ள புத்தகங்களை மட்டுமே படி.

— ஜான் ரஸ்கின்

The Association of the Managers of the Aided Ele. Schools.

(CITY OF MADRAS)

To

1. The Hon'ble, The Chief Minister, Madras State.
2. The Hon'ble, The Minister of Finance and Education, Madras State.

We beg to submit this Memorandum on behalf of the above Association concerning the policy of Free-Education adumbrated in G. O. No. 1976 dated 30-11-57 and the Director's proceedings R. O. C. No. 940-B 7/58 dated 5-12-58.

The Government's orders published are to take effect from the academic year 1959-60 and there will be only 2 classes of Ele. Schools in the State namely – (1) Fee levying schools and (2) Non-Fee levying schools. In the case of Fee Levying Schools there will be only recognition provided they conform to the syllabus, but no kind of aid. The Management is at liberty to determine the rate of fees. The responsibility to meet all the charges is that of the Management and the Management will have to fix the rate at such a level as to cover the cost of maintenance. The Management will be obliged to pay at least Rs. 61/- to a higher grade teacher and Rs. 79/- for a secondary grade teacher. In addition the Management has to meet the rent, salary to the Menial Staff, T. P. F., Stationery, Postage etc. So unless a minimum fee of Rs. 3/- per month per head is

fixed for each standard, it will not be possible to meet the expenses. With this rate of fee it may be possible for some Managements to run the Institution as Fee Levying schools in forward areas in the City and Municipalities, but it is humanly impossible and impracticable in the backward and rural areas. It may be safely said that the Fee Levying schools, will not be more than 5 to 10% of the total number of schools.

As regards the Non-Fee levying Schools, the effect to the G. O. is that no fee should be collected from Standards I to V and the Management is asked to meet the expenses with the usual grants in aid according to the rules and orders in force. The grants that will be paid are (1) The Teaching Grant, (2) Maintenance Grant. The Teaching Grant will not exceed Rs. 33/- for a Higher Grade teacher and Rs. 51/- for a Secondary Grade teacher (3) a special pay of Rs. 6/- for a higher grade teacher and Rs. 5/- for a secondary grade teacher, (4) Dearness Allowances at Rs. 25/- for a higher grade teacher and Rs. 29/- for a secondary grade teacher The entire amount paid by the Government should be paid to the teacher and the Management should not touch any portion of it for other expenses.

In some of the Aided Ele. Schools, a number of teachers are paid more salary than what the grant scale provides and the entire cost is met by the Management. In addition, the Management is obliged to engage the services of a sweeper, a scavenger (full time or part time), a peon and conductress to escort the young children to and from the school and also to attend to their needs during the school hours and each of them will have to be paid atleast Rs. 15/- per month.

Further, most of the schools are located in rented buildings and in the city, where the rents are fairly high, the Management is not only compelled to pay higher rents, but also execute, at its own cost all the necessary repairs to the building with a view to avoid the departmental remarks regarding the sanitary conditions. Further, even under the provisions of the Rent Control Act, the landlord cannot be compelled to spend more than one month rent for repairs. In the case of own buildings, the Management has to pay the rates and taxes and execute the annual repairs at its own cost. Further the Management has to meet expenses like T. P. F. Contribution, Postage, Stationery and Printing, Conveyance charges, lighting, contingencies etc. All these expenses are now being met from the fee collections and compensatory grant paid at 4 as., 6 as., 10 as., 12 as., Re. 1/- Rs. 1/2/0, Rs. 1/6/0 and Rs. 1/8/0. The G. O. puts to an end to all these sources of revenue and the Management has to look only to the annual maintenance grant not exceeding 15% on the teaching grant the same being subject to cuts at the discretion of the Inspecting authorities. The real problem is whether the management will be able to meet all the aforesaid expenses with the uncertain source of maintenance grant. It can be said without fear of contradiction that the maintenance grant offered will not be sufficient even to meet the rent payable to the premises. This can be demonstrated by the fact, that in a Lower Ele. School with five standards, 5 teachers, four higher grades and one secondary grade will be required and the maximum grant will be Rs. 206/- (177 teaching grant plus 29 additional salary) and the entire amount will have to be paid to the teachers. The Management will have to meet the salary of a sweeper, a scavenger and one

conductress or peon atleast at Rs. 15/- per head and the total cost will be Rs. 45/-. By way of rent a sum of Rs. 60/- atleast and a further sum of Rs. 20/- for other charges such as T. P. F. etc., will be required. So, in all the Management will have to find atleast Rs. 125/- every month for meeting other expenses. The maintenance grant that is offered at 15% without cut will work out only to Rs. 26/50 per month and there is still a deficit of Rs. 98/50 which the Management will have to meet every month.

At the general body meeting held on 16—1—59 the Association has suggested the following proposals, viz., (1) to pay compensation at the revised rates of 8 as, 10 as, 12 as, 14 as, and Re. 1. per head per month for Standards I to V. For a Lower Elementary School with a strength of 35 in each of the 5 standards, the compensation payable is Rs. 17-8, Rs. 21-14, Rs. 26-4, Rs. 30-10, and Rs. 35 aggregating in all to Rs. 131—4—0 which will be barely sufficient to meet all the expenses or (2) to pay in addition to the assessed grant and D. A. the rent in the case of rented buildings, and rates and assessments and a fixed consolidated amount for repairs in the case of own buildings and a fixed consolidated monthly grant at 30% on the assessed grant which works out to Rs. 53. The Association has also suggested the postponement of the implemen tation of the scheme till 1960—61. It cannot be denied or disputed that the proposals put forth by the Association are very fair and reasonable and just sufficient to meet their expenses.

We therefore most fervently request you to consider all these facts seriously and sympathetically. We assure the Government that the Managements are ready and willing to render all possible assistance in giving effect to the scheme of free education provided their pockets are not touched. We also assure that any alternative and reasonable proposal which meet the requirements of the Managements will be most certainly welcomed and accepted by them.

We therefore once again request you to consider these facts very deeply as otherwise the inevitable consequence will be a reduction in the already low salaries of the Teachers, or the termination of their

services. Further far from helping the spread or the quality of Ele. Education the Government's hasty and ill-advised action taken without consulting all interested in Ele. Education can only retard progress, besides creating dissatisfaction and unemployment. There are 217 aided schools in the city and about 1200 in the State, about 3500 teachers in the city and 15,000 in the State, and nearly 2,00,000 of children studying in Aided Ele. Schools. The Government's order is bound to have serious and far reaching repurcussions and will make the position of the Managements, the teachers and the children very deplorable.

We therefore once again request you to consider all these facts sympathetically and evolve a solution which will be satisfactory to one and all interested in the cause of Ele. Education.

Madras,
3rd February, 1959

We remain,

YOURS IN THE CAUSE OF EDUCATION:

1. *Sri. P. Veeraraghavan* (Editor "Arambakalvi"),
2. *Srimathi Indrani Chengalvarayan,*
3. *Miss. G. Rajendram, B. A., B. T.,*
4. *Sri. Mayandi Nadar, M.L.A.,*
5. *Sri. V. Sundaramurthy Chetty, M.C.,*
6. *Sri. A. R. Seshachalam* (President),
7. *Sri. J. Muthukrishnan* (Secretary),
8. *Sri. T. Ramanujam, B.A.,B.L.,*
9. *Sri. G. A. Appan, B.Sc.*

The Association of the Managers of Aided Elementary Schools of Madras City.

RESOLUTIONS

1. In view of the statement, made by the Honble., Minister for Education, on the floor of the council of referring the issue to the Education Committee, this Association resolves to assure the Government that it will not only defer taking further action in the matter that is likely to delay and create difficulties but also assist the government to selve the problem te the satisfaction of one and all concerned.

2. This Association further resolves to request the Government to issue a press statement on the lines of the statement made by the Honble., Minister for Education on the floor of the council.

3. This Association resolves to request the Honble., Minister and members of the Education committee not only to consider the points raised in the memorandum of the association but also give a hearing to the representatives of the association on the said points and also the alternative proposal which the Govt. may have in their view.

4. This association resolves to request the Govt. that the final decision may be communicated to it early so that the manage ments may have time to make necessary arrangements for the future running of the schools.

J. MUTHUKRISHNAN,
Secretary

உதிர்ந்த மலர்கள்

ஒரு ஜனநாய சமுதாயத்தின் அரசியலில் ஓட்டுச் சீட்டுக்குத் தான் மதிப்பு உண்டே தவிர, துப்பாக்கியின் வேட்டுக்குக் கிடையாது. இந்த உண்மையை மறுப்பவர்களை மக்கள் வாளா விட்டுவைத்தது கிடையாது.

— ஆப்ரகாம் லிங்கன்.

சுவை மிகுந்த செய்திகள்

காலில்லா விமானி

பறப்பதற்குக் கால் வேண்டுமா? வேண்டாம் என்று நிரூபிக்கிறார் ஆல்பர்டோ ஹொராஷியோ என்பவர். சுமார் ஓராண்டுக்கு முன் ஒரு ரயில் விபத்தில் இரண்டு கால்களையும் இழந்த அவர் உடல் தேறி செயற்கைக் கால்களைப் பொருத்திக் கொண்டு நடக்கக் கற்றார். பிறகு மோட்டார் சைக்கிள் ஓட்டக் கற்றார். இப்போது விமானம் ஓட்டவும் தொடங்கிவிட்டார்.

இன்று வரவில்லை!

ஜோனஸ்பர்க்கில் (தென் ஆப்பிரிகா) ஒரு பள்ளிக்கூடத்தில் ஆண்டு விழா.

"இவ்வாண்டில் ஒரு நாள் தவறாமல் பள்ளிக்கூடம் வந்த லௌசியாவுக்குப் பரிசு" என்ற அறிவிப்பு படிக்கப்பட்டது.

ஒரு கணம் மௌனம்.

திடீரென்று, "அவள் இன்று பள்ளிக்கூடம் வரவில்லை, சார்" என்று மாணவர் கூட்டம் ஒரு முகமாகக் கூவியது!

195 வயது வாலிபர்!

ஈரானில் கொலுவ் என்னும் கிராமத்தில் ஒருவர் இருக்கிறார். அவருக்கு வயது 195. உயரம் நாலேகால் அடி. செருப்பே அணிவதில்லை. நிறைய நடக்கிறார். ஒரே மூச்சில் 12 மைல் தூரம் கூட அவர் நடக்கிறார். கண் பார்வை நன்றாயிருக்கிறது. ஆனால் காது கேட்பதில்லை. புகை குடிப்பதில்லை. ஆனால் கொஞ்சம் கொஞ்சம் டீ, அருந்துகிறார். சையத் அலி சாலிகி என்னும் அந்தப் பெரியவர் சொல்கிறார்; வேலை ஏதாவது செய்துகொண்டிருந்தால் எனக்கு அலுப்பு ஏற்படுவதில்லை. சும்மா இருந்தால் சோர்வாக இருக்கிறது.

வெறும் கையால் சிங்கத்தை வென்ற வீரர்!

இங்கிலாந்து அரசாங்கம் அண்மையில் லிலானி டாகா என்ற ஆப்பிரிகர் (ரொடீஷியா) ஒருவருக்கு ஜார்ஜ் மெடல் என்ற உயர்ந்த பரிசை அளித்தது. காரணம், அவர் தீரமாக ஒரு சிங்கத்தோடு போரிட்டு ஒரு தாயையும் குழந்தையும் காப்பாற்றினார்.

கிராமத்தில் புகுந்துவிட்ட ஒரு சிங்கம், மூங்கில் தட்டி போட்டிருந்த குடிசைக்குள் புகுந்துவிட்டது. அங்கு இரண்டு வயதுக் குழந்தையோடிருந்த ஒரு தாய் போட்ட கூச்சலைக் கேட்டு டாகா ஓடி வந்தார். துப்பாக்கியோடுதான்? ஆனால் அதில் ரவை இல்லை என்று தெரிந்ததும் அதை வீசி எறிந்துவிட்டு, வெறும் கையாலேயே சிங்கத்துடன் நெடுநேரம் போரிட்டார். அவர் மகன் கடைசியில் ஒரு துப்பாக்கி எடுத்து வந்து சிங்கத்தைச் சுட்டான். அது விழும் வரை தனது பலமான பிடியை விடாமல் டாகா

போரிட்டார். நல்ல காயம்; குணமாக நாளாயிற்று. தாய் பிழைத்தாள்; குழந்தை சில நாளில் இறந்தது.

“இந்த மெடலை நான் எதிர் பார்க்கவே இல்லை. ஆனால், இப் பரிசால் என் குடும்பத்தினர் பெருமை கொள்வார்கள்” என்றார் விலாணி டாகா.

இப்போது அக் கிராமத்தார் டாகாவை “சிங்க நெஞ்சன்” என்றுதான் அழைக்கிறார்கள்.

(தொடர்ச்சி 60-ம் பக்கம் பார்க்க.)

சென்னை நகர எய்டெட் பள்ளி நிர்வாகிகள் சங்கம்

29-11-1958-ந் தேதி பிறப்பிக்கப்பட்ட G. O. No. 2124 அரசாங்க உத்தரவையும் பள்ளி நிர்வாகிகள் சங்கம் சமர்ப்பித்த அறிக்கையையும் சட்டமன்றக் கல்விக்குழுவுக்குப் புனராலோசனைக்கு அனுப்புவதாக சட்ட மன்றத்தில் கனம் கல்வி அமைச்சர் தெரிவித்ததை யொட்டி நிர்வாகிகள் சங்கம் மேற்கொண்டு நடவடிக்கைகள் தற்காலிகமாக நிறுத்துவதோடு அரசாங்க உத்தரவின் விளைவாக ஏற்படும் சிக்கல்களைத் தீர்க்க நிர்வாகிகள் தங்கள் ஆலோசனைகளும், ஒத்துழைப்பும் சர்க்காருக்கு அளிப்பதாகத் தீர்மானித்தது.

சட்ட மன்றத்தில் கனம் கல்வி அமைச்சர் தெரிவித்த கருத்துக்களைத் தெளிவுபடும் வண்ணம் பத்திரிகை அறிக்கை (Press Statement) தரவேண்டும் என இச்சங்கம் கனம் கல்வி அமைச்சரைக் கேட்டுக் கொள்ளுகிறது.

சங்கம் வெளியிட்ட அறிக்கையில் கண்ட கருத்துக்களை கனம் கல்வி மந்திரியும், சட்ட மன்ற கல்விக் குழுவினரும் பரிசீலனை செய்யக் கோருவதோடு சங்க பிரதிநிதிகளை பரிசீலனை காலத்தில் விசேஷ அழைப்பின்பேரில் அழைப்பித்து விளக்கம் பெற்று ஆவன செய்யுமாறு தீர்மானிக்கப்பட்டது.

1-6-1959-க்குப் பிறகு பள்ளிகளை நடத்த வழி வகைகளை வகுக்க இயலும் வண்ணம் போதிய அவகாசம் அளிக்கும் வகையில் அரசாங்கம் தங்கள் பூர்ணமான முடிவைக் காலதாமதமின்றி சங்கத்துக்கு அறிவிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது

J. முத்துகிருஷ்ணன் (செயலாளர்.)

மிருதங்க ஸ்வரபோதினி

தாள வாத்தியங்களுக்குள் சிறந்து விளங்குவது மிருதங்கம் என்பதை எல்லோருமே ஒப்புக்கொள்கிறோம். அந்த வாத்தியத்தைப் பயில விரும்பும் எவரும் தாமாகவே அதைச் சிறப்பாகச் செய்துகொள்ளும் வகையில் இந்நூல்களை ஆசிரியர் அமைத்து இருக்கிறார். முதல் பாகத்தில் ஸ்வரங்கள், டேகா, மீட்டு, சாப்பு அரைசாப்பு முதலியவை வாசிக்கவும், இரண்டாவது பாகத்தில் சிறுசொற்றொடர்கள் பழகவும் மூன்றாவதில் தளக்கோர்வைகள், ஆவர்த்தன சிட்டாக்கள் பயிலவும், பாடங்கள் உள்ளன. புரியக் கூடிய நடையில் பாடங்களும் அவற்றைத் தெளிவாக விளக்கும் முறையில் விளக்கப் படங்களும் உள்ள இந்நூல்களை மிக நல்ல முயற்சியெடுத்துப் பதிப்பித்திருக்கிறார் ஆசிரியர். அரசாங்கத்தின கலைப் போஷணைப் பகுதியான சங்கீத நாடக சங்கம் இம்முயற்சியில் ஆதரவளிக்கிறதென்பதை ஆசிரியரே நன்றியுடன் குறிப்பிடுகிறார். நல்ல பணிகளுக்கு எப்போதும் ஆதரவு கிடைக்கும். பல இசை வல்லுனர்களும், அறிஞர்களும் மற்றவர்களும் பாராட்டுரைகளும் ஆசி மொழிகளும் வழங்கி இந் நூல்களை வாழ்த்தியிருக்கின்றனர். நல்ல தாள வாத்தியம் பயில விரும்பும் எவரும் இந்நூல்களால் நல்ல பலனடைவார்கள் எனலாம். —சுதேசமித்திரன்— ஸ்ரீ ரஞ்சனி

டில்லி சங்கீத நாடக சங்க அக்ராஸனர், சென்னை பிரதம நீதிபதி ஸ்ரீ P. V. ராஜமன்னார் ஷை நாடக சங்கக் காரியதரிசி ஸ்ரீமதி நிர்மலா ஜோஷி சென்னை சங்கீத நாடக சங்க அக்ராஸனர் ஸ்ரீமதி ருக்மணிதேவி அம்மையார் காரியதரிசி E. கிருஷ்ண அய்யர் அவர்கள் ஸ்ரீ சங்கீதரத்னாகரம் Prof P. சாம்பமூர்த்தி பிரம்பூர் ஸங்கீத ஸபா அக்ராஸனர் டாக்டர் K. N. கருணாகரன் அவர்கள் டாக்டர் தேவதாஸ் B.A.L T. M.T.C. தின்னனூர் பிரபல நடிகர் சித்தூர் V. நாகைய்யா சங்கீத கலா ரத்னம் திருமதி K. B. சுந்தராம்பாள் முதலிய பிரபலஸ்தர்களின் ஆதரவும், பாராட்டுதலும் பெற்றது.

[பாகங்கள் 1, 2, 3, ஆசிரியர்: சோமங்கலம் எத்திராஜன் வெளியீடு மிருதங்க வித்யாலயம், 6, நாராயண ரெட்டித் தெரு அகரம் சென்னை—11.]

விலை 0-75. 1-25, 2-00, (தபால் 0-75)

எல்லா இடங்களிலும் ஏஜண்டுகள் தேவை.

ஆரம்பக் கல்விப் பிரச்னை

சர்க்காரின் மான்ய உதவியைப் பெற்று இப்பொழுது நடந்து வரும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களில் பெரும்பாலானவை சமீபத்தில் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின் விளைவாக, மூடப்படுவது தவிர்க்க முடியாததாகிவிடலாம் என்று கருதி, அவற்றை நடத்துவோர் சர்க்காரிடம் முறையிட்டுக் கொண்டனர். அதைக் கவனித்து ஆவன செய்வதாக மேல் சபையில் கல்வி மந்திரி கூறியிருப்பதை வரவேற்கிறோம். ஒரு பள்ளிக்கூடத்தையும் மூட வேண்டிய அவசியமிராமல், எந்த உபாத்தியாயரும் வேலை இழக்க நேரிடாதபடி வழி வகை காண சர்க்கார் முயற்சிப்பர் என்று அவர் கூறியுள்ளார். எனவே சர்க்காரது முடிவு தெரியும் வரை மேல் நடவடிக்கை எதையும் எடுத்துக் கொள்ள வேண்டாம் என்று அவர் கேட்டிருப்பது நியாயம். பல நிர்வாகங்கள் தமது ஆசிரியர்களுக்கு நோட்டீஸ் கொடுத்து வருவதைத்தான் 'நடவடிக்கை' என்று மந்திரி குறிப்பிடுகிறார் என்று நினைக்கிறோம். அது இப்பொழுது அவசியமில்லை என்றே நாமும் கருதுகிறோம்.

கல்வி ஆலோசனை போர்டைக் கலந்தாலோசித்து சர்க்கார் தமது முடிவை அறிவிப்பார் என்று கல்வி மந்திரி கூறினர். இது போதுமானதுதானா என்ற சந்தேகம் பரவலாக இருக்கத்தான் செய்யும். அந்த போர்டு கூடுமுன், தமது உத்தேசங்களைப் பிரேரணைகளாக, காரிய காரண விளக்கங்களுடன், விளைவுகளைப் பற்றிய முழு புள்ளி விவரங்களுடன், ஒரு விரிவான அறிக்கையாக வெளியிட வேண்டும். இது அடிப்படையான மாறுதல்; தீர்காலோசனை செய்து உருப்படுத்த வேண்டியது. ஆரமபக் கல்வியைக் கட்டாயமாக்கவேண்டும் என்ற நோக்கத்துடன் இதைப் பிணைக்கப் பார்க்கிறார்கள் சர்க்கார். அது இலவசமாகக் கிடைக்கச் செய்வதும் உத்தேசம். ஆனால், சர்க்காருக்குப் பண முடை இருக்கும் நிலைமையில் எல்லாக் குழந்தைகளுக்கும் கல்வி இலவசமாக அளிக்கப்படவேண்டும் என்று நினைப்பதே தவறு. வசதியுள்ள பெற்றோர்கள் சம்பளம் கட்டும்படி செய்வதுதான் நியாயம். அப்படிச் சம்பளம் வாங்குவதற்கு ஒரு வரம்புகட்ட இடமிருக்கிறதே தவிர, சம்பளம் வசூலித்தால் மான்யம் இல்லை என்று சொல்வது சிறிதும் நியாயமாகாது. சர்க்காரே முழுப் பொறுப்பேற்றால் என்ன செலவாகுமோ அதில் ஒரு பகுதிதான் மான்யமாகக் கொடுக்கப்படுவது. எனவே, மான்ய மறுப்பு நியாயமே ஆகாது.

மேலும் இரண்டு விஷயங்கள் நுணுக்கமாகக் கவனிக்கப்பட வேண்டியவை. (1) கல்வியின்

தரம். (2) எய்டெட் ஸ்கூல்களை மூடிவிட்டால் ஏற்படக் கூடிய நிலை. ஸ்தல ஸ்தாபனங்கள் நடத்தும் பள்ளிக்கூடங்களில் மொத்தத்தில் கல்வி போதனையின் தரம் குறைவாகத்தான் இருக்கிறது. அதை உயர்த்துவதில் சர்க்கார் கவனம் செலுத்துவது தான் அவசரமான விஷயம். எய்டெட் ஸ்கூல்கள் பெரும்பாலானவற்றில் போதனையின் தரம் உயர்ந்து காணப்படுகிறது. அவற்றை எடுத்துவிட்டு, ஸ்தல ஸ்தாபனங்கள் அல்லது சர்க்காரின் பொறுப்பாக்கிவிட்டால், எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் போதனை அடி மட்டத்துக்கு வந்துவிடும். இத்தகைய "சமத்துவத்தை" சமூகத்தின் மீது திணிப்பது சர்க்காரின் நோக்கமாக இருக்க முடியாது. தவிர எய்டெட் ஸ்கூல்களை மூடிவிட்டால் அவற்றையெல்லாம் மேற்கொண்டு நல்லபடி நடத்தக்கூடிய நிலைமையோ, பண வசதியோ சர்க்காரிடம் இல்லை. இதற்கு ஆகும் அவகாசம் ஒருபுறமிருக்க, ஏராளமான குழந்தைகளுக்கு படிப்புத் தடைப்படும். இருக்கும் பள்ளிக்கூடங்களில் நெரிசல் அதிகமாகும். உபாத்தியாயர்கள் பெருவாரியாக வேலை, சர்வீஸ் வசதி, அந்தஸ்து முதலியவற்றை இழக்க நேரிடும். எனவே இதைப் பற்றி அடிப்படையான சிந்தனை தேவை. விரிவான ஆலோசனை தேவை. அந்த ஆலோசனையானது அதற்கேற்ற சூழ்நிலையில் நடைபெறுவது முக்கியமானது.

வருகிற ஜூன் மாதத்திலிருந்து உத்தேச மாறுதல் அமுலுக்கு வருமென்று சர்க்கார் உத்தரவு கூறுகிறது. இந்தக் கெடுவை முதலில் எடுத்துவிட வேண்டும். அப்படிச் செய்து விட்டால்தான் நிர்ப்பந்தமற்ற பரிசீலனைக்கு வழி பிறக்கும்.

வெள்ளையறிக்கையைத் தயாரித்து வெளியிட்டால், எய்டெட் ஸ்கூல் நிர்வாகிகளும், எய்டெட் ஸ்கூல் ஆசிரியர்களும் கூடி அதை விவாதித்துத் தமது கருத்துக்களைத் தெரிவிப்பது சுலபமாக இருக்கும். தென்னிந்திய ஆசிரிய சங்கத்துக்கும் வாய்ப்பு அளிக்கப்படவேண்டும். பிறகு நிபுணர்கள் அடங்கிய ஒரு சிறிய குழாத்தைக் கொண்டு பரிசீலனையை நடத்தி, பிரேரணைகளை இறுதியாக்கி, கல்வி ஆலோசனை போர்டை அணுகுவதுதான் பயனுள்ள வழி.

ஆரம்பக் கல்வியை இலவசமாக, அல்லது இலவசமாகவும் சம்பளம் வசூலித்தும், அமுலாக்க சர்க்கார் விரும்பினால் அதற்கென்று தனி பரிசீலனையை நடத்தி பிரேரணைகளைத் தயாரிப்பதுதான் முறை. அம்மாதிரி உருப்பெறும் திட்டத்தில் எய்டெட் ஸ்கூல்களை எப்படிப் பயன்படுத்திக் கொள்வது என்பது கூடவே கவனிக்கப்பட வேண்டும். ஆனால் ஒரே அடியாக குறுக்குச் சால் பாய்ச்சி, உள்ள

படிப்பும் மோசமாகும்படியான நிலைமையைத் தோற்றுவிப்பது புத்திசாலித்தனமாகாது.

கல்வித் துறையில் கண்மூடித் தனமாக பல மாறுதல்களை அடிக்கடி செய்துகொண்டே வந்து படிப்பைக் குட்டிச்சுவராக்கி விட்டிருக்கிறார்கள். மந்திரிகளின் கைங்கரியம் கொஞ்சம், இலாகாப் பொறுப்பாளரது விருப்புவெறுப்புக்கள் வேறு. இவ்விரண்டுமாகச் சேர்ந்து விளைவித்துள்ள அனர்த்தங்கள் கொஞ்ச நஞ்சமல்ல. இந்தப் போக்கிற்கு முற்றுப்புள்ளி வைத்து, மாறுதல்களை செய்யு முன் பின்பற்ற வேண்டிய நடைமுறையை வகுத்து வரையறுத்து அமுலாக்க வேண்டிய காலம் வந்துவிட்டது. எனவே மேற்கொண்டு நடைபெறவிருக்கும் பரிசீலனை அவசரக் கோலமாக இருக்கலாகாது. இது உடனடியாக முடிவு செய்தாக வேண்டிய அவசர விஷயமல்ல. நெடுநாளாக இருந்து வரும் நிலைமையை, போதிய தகவல், பரிசீலனை, விவாதம் இல்லாமல், ஒரு நிர்வாக உத்தரவின் மூலம் மாற்றப் பார்ப்பது அபாயகரமானது. இந்தப் போக்கை அனுமதிக்கவே கூடாது. சட்ட சபை மெம்பர்கள் இதில் விசேஷ கவனம் செலுத்துவது அவசியம்.

— 'தினமணி' 14-2-59.

(தலையங்கம்.)

சுவை மிகுந்த செய்திகள் —— (56-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு சிறு தவறு

காரிலே சென்ற "கனவான்"! வண்டியை நிறுத்தி, பாதையிலே நடந்து கொண்டிருந்த ஒருவரையும் தம்முடன் அழைத்துச் சென்றார். அவருடன் பேச்சுக் கொடுத்தார். "உன்னைப் பார்த்தால் நம்பலாம் போலிருக்கிறது. நான் வழிப்பறி செய்பவன். என் கூட்டாளி இப்போது கைதாகி விட்டான். நீ எனக்குக் கூட்டாளியாக இருக்கிறாயா? வேறு ஒன்றும் செய்ய வேண்டாம். எல்லாம் நான் பார்த்துக் கொள்கிறேன். கார் ஓட்டத் தெரிந்திருந்தால் போதும்" என்றார்.

சக பிரயாணி சம்மதித்தார். அவரே கார் ஓட்டினார். எங்கே? போலீஸ் நிலையத்துக்கு.

வழிப்பறிக்காரர் ஒரு சிறு தவறு செய்துவிட்டார். தாம் "மப்டி"யிலுள்ள ஒரு போலீஸ்காரரோடு பேசுகிறோம் என்பதை அவர் உணர்ந்துகொள்ளவில்லை.

— "தினமணி சுடர்"

ஏழு சஞ்சீவிகள்

பொதுவாக, நமக்கு ஏதேனும் ஒரு மோசமான நோய் வரும் போதுதான், உடல்நலத்தின் அருமையை உணருவோம். அதுவரையிலும் நாம் நம் உடம்பைப்பற்றியாகிலும், அதைப் பக்தியாய்ப் போற்றிப் பாதுகாக்கவேண்டிய அவசியத்தைப் பற்றியாகிலும் அதிகம் சிந்திப்பதில்லை. நம்முடைய பணம், பொருள் அனைத்திலும் உடல்நலமே பெரியது; விலை மதிப்பிட முடியாத தெய்வத் திருக்கொடை அது. அதற்கு மாற்று கிடையாது. அதை இழந்துவிட்டால், அதைத் திரும்பப் பெறுவது மிகவும் கடினம். பணத்தினால் அதை வாங்க முடியாது. மருந்தினால் கூட அதை எப்பொழுதும் மீட்டல் இயலாது. உடம்பு கெட்டுப் போவதற்கு முன்னரே கவனித்து, ஒழுங்கான முறையில் நடந்து வருவதுதான் அறிவுடைமையாகும்.

உடம்பு எப்படிக் கெடுகிறது! இயற்கை விதிகளை மீறி நடப்பதனாலே. சிலர் தெரியாமல் மீறலாம். பலர் விதிகளை அறிந்திருந்தும், அவைகளுக்கு இணங்கி நடப்பதில்லை. தங்கள் மனம் போல் உண்டு குடிக்கிறார்கள். அவர்களுக்குச் சில காலம் ஒரு கெடுதியும் ஏற்படாது போகலாம். ஆனால் இயற்கை அவர்களைத் தண்டிக்காமல் விடாது. அவர்கள் உடல்நல விதிகளை மேன்மேலும் புறக்கணித்துக் கொண்டே இருந்தால், அவர்கள் உடம்பு எவ்வளவுதான் வலுவுடையதாயினும், அது நாளடைவில் உடைந்து போகும் என்பது உறுதி. முற்பகல் விதைத்தால், பிற்பகல் விளையும். உடம்பு கெட்ட பிறகு வாழ்க்கையை அனுபவிக்க முடியாது; நாம் நமக்கும், சில வேளை பிறருக்கும் ஒரு பாரமாகவும் ஆகிவிடுவோம். ஆகவேதான் ஒவ்வொருவரும் நமது உடம்பைப் பற்றியும், அது எவ்வாறு வேலை செய்கிறது என்பதைப்பற்றியும் எவ்வளவு கற்றுக்கொள்ள முடியுமோ, அவ்வளவும் கற்றுக்கொள்ளுதல் அவசியம். ஒரு கப்பல் ஓட்டியானவன் கடலிலே கப்பலைச் செலுத்துவதற்கு எப்படித் தெரிந்துகொண்டிருக்கிறானோ, அப்படியே நாமும் நமது உடம்பின் நிலையைக் கண்டறிந்து நடக்கவேண்டும்.

நோய் பல வழிகளில் உண்டாகலாம். காலரா, மலேரியா, க்ஷயரோகம் போன்ற வியாதிகள் கிருமிகளினால் உண்டாகுபவை. இன்புளுயன்ஸா முதலியவை நச்சிகளினால் (virus) உண்டாகும். இன்னும் சில பிணிகள் வெறிநாய் கடித்தல், பூச்சி கடித்தல், எலும்பு முறிவு முதலிய காரணங்களால் ஏற்படும். இவைகளில் பெரும்பாலானவற்றிற்கு இக்காலத்தில் விஞ்ஞானிகள் நேர் மருந்துகளைக் கண்டுபிடித்துத்

தந்திருக்கிறார்கள். அவர்களுக்கு நம் நன்றி உரியது.

ஆனால் வேறு அநேக வியாதிகள் நமது முட்டாள் பழக்க வழக்கங்களினாலும், கெடுதலான உணவு, குடிபானங்களினாலும் விளைகின்றன. இப்படி நோய் உண்டாகப் பெற்றவர்களில் பலர் அதைக் குணப்படுத்திக்கொள்வதற்கு மருந்து தேடித் திரிவார்களே ஒழிய, அதற்கு மூல காரணமான பழக்கத்தையோ உணவையோ அல்லது பானத்தையோ கைவிடமாட்டார்கள். அதுவும், அந்தப் பழக்கம் சிறு வயதிலிருந்து ஏற்பட்டதானால், அல்லது அந்த உணவு வாய்க்குச் சுவையாக இருந்தால், அதை இலேசிலே விடமாட்டார்கள். அது கெடுதல்தான் என்றுகூட அவர்கள் ஒப்புக்கொள்ளலாம்; மற்றவர்களுக்கு உபதேசிக்கவும் செய்யலாம். ஆனால் எப்படியோ தங்களுக்கு மட்டும் அதனால் அவ்வளவாகத் தீங்கு இல்லை என்று தங்களையே சமாதானம் செய்துகொள்வார்கள்; அஃதாவது, ஏமாற்றிக்கொள்வார்கள்!

பெரும்பாலான நோய்களில் வலியும் வலுக் குறைவும் உண்டாகும். இவை இயற்கையின் அபாயக் கொடிகள். இவற்றைக் கண்ட உடனே, நாம் நமது வாழ்க்கைப் பழக்கங்களை ஆராய்ந்து பார்த்து, திருத்திக்கொள்ள வேண்டும். ஆனால் நாமோ கடையிலே ஏதோ ஒரு மாத்திரை வாங்கிச் சாப்பிட்டு அதுவே போதும் என்று இருந்துவிடுகிறோம். நோயின் அறிகுறிகளை மறைக்க முயல்கிறோம். அதன் அடிக் காரணத்தைக் கண்டு பிடித்து நீக்குவதில் நாட்டம் இல்லை. மருந்துகள் அவசியம் தான். ஆனால் அவைகளைத் தக்க மருத்துவர்களே கையாளவேண்டும்; வலிகொல்லி மருந்துகளால் எந்த நோயும் சுகமாவதில்லை. இதை அனைவரும் அறிந்திருக்தல் அவசியம். வலியை மட்டுமே அவை விலக்குகின்றன; நோய் அப்படியேதான் இருக்கும்.

அப்படியானால் நாம் எவ்வாறு உடல்நலமும் மகிழ்வும் அடையலாம்? அதற்கு ஏற்ற மருந்துகள் இயற்கையில் உள்ளனவா? புகழ் பெற்ற மருத்துவ ஆசிரியர் ஒருவர் ஏழு சஞ்சீவிகளைக் குறிப்பிடுகிறார்; "சுத்தமான காற்று, சூரிய வெளிச்சம், ஓய்வு, உடற்பயிற்சி, நல்ல உணவு, தண்ணீர், தெய்வ வல்லமையில் நம்பிக்கை ஆகிய இவைகளே உண்மையான பரிகாரங்கள்."

எவ்வளவு சாதாரணமான பொருட்கள், பாருங்கள்! எவ்வளவு மலிவு! எனினும் பரம ஔஷதங்கள்! நமக்குச் சிறிதேனும் விவேகம் இருந்தால், இவை ஒவ்வொன்றையும் தாராளமாக உபயோகிப்போம்.

முதலாவது சுத்தமான காற்று. உடம்பில் உள்ள ஒவ்வொரு உயிர் அணுவுக்கும் பிராணவாயு தேவை. பெரிய நகரங்களில்

வாழும் மக்களில் பலர் மிகவும் பலவீனமாக இருக்கிறார்கள். ஏன் தெரியுமா? அவர்கள் கெட்ட காற்றை—தெருப் புழுதியிலும் தொழிற்சாலைகளின் புகையிலும் கெட்ட காற்றை—சுவாசிக்கிறார்கள். வேறு பலர் தங்கள் வீடுகளில் சரியான காற்றோட்டம் அமைத்துக்கொள்ளாத காரணத்தால அடிக்கடி வியாதியாய் விழுகிறார்கள். இன்னும் பலர் பீடி, சுருட்டு, சிகரெட் பிடித்து, தங்கள் மூச்சுக்காற்றைத் தாங்களே கறைப்படுத்திக்கொள்கிறார்கள். நாம் நோயின்றி வாழ விரும்பினால், எப்பொழுதும் தூய காற்றை உட்கொள்ளவேண்டும்.

அடுத்த மருந்து சூரிய வெளிச்சம், இதுவும் உடல் நலத்திற்கு இன்றியமையாதது. ஞாயிற்றின் கதிர்கள் இன்றி எவ்வுயிரும் பிழைக்க முடியாது. காற்றை அவை தூய்மையாக்குகின்றன. எப்படி என்றால், மழையும் மூடுபனியும் பெய்யுமாறு செய்வதால், இவை வளி மண்டலத்தை நன்கு கழுவி விடுகின்றன. சூரிய வெளிச்சம் நோய்க் கிருமிகளை அழிப்பதிலும் இணையற்ற வல்லமை உடையது. மேலும் இலைகளில் உள்ள பச்சையம் (chlorophyll) நன்றாகச் செயலாற்றுவதற்கும் அது அவசியம். ஒவ்வொரு இலையும் ஒரு தொழிற்சாலை. ஒவ்வொன்றும் தன் உயிர் வாழ்க்கைக்குத் தேவையான அளவு பிசிதச் சத்தையும் (protein) கரிநீரகைச் சத்தையும் (carbohydrates), வைட்டமின்களையும் பச்சை நிறமுள்ள இந்த இரசாயனப் பொருளின் உதவியால், தானே ஆக்கிக் கொள்கிறது. இப்படிச் சமைத்த சத்துகள் தாம் பின்னால் விலங்குகளுக்கும் மனிதர்களுக்கும் உணவாகின்றன. ஆனால் சற்று மேலே கூறியவாறு, வெயிலே பச்சையத்தைச் செயலாற்றப் பண்ணுகிறது.

மூன்றாவது தெய்வ மருந்து ஓய்வு. களைத்த உடலுக்கும் கலங்கின உள்ளத்துக்கும் அதைப் போல் நன்மை நல்குவது ஒன்றும் இல்லை. நமக்குத் திடீரென்று ஒரு கடுமையான நோய் உதித்தால், இயற்கை அன்னை நமக்குச் செய்யும் முதல் உதவி நம்மை நடமாட முடியாமல் பண்ணி, படுக்க வைப்பதேயாகும். குழந்தைகள் எவ்வளவு தூங்குகிறார்களோ, அவ்வளவுக்கு விரைவாக வளருவார்கள். நமது உடம்பின் உறுப்புகள் சில நம்மிடம் உத்தரவு கேட்காமலே ஓய்வு கொள்ளுகின்றன! உதாரணமாக, இருதயம் ஒவ்வொரு அடிப்புக்குப் பிறகும் ஒரு விநாடிக்கும் குறைந்த அளவு நேரம் இளைப்பாறுகிறது. அது அப்படிச் செய்யாவிடில், விரைவில் நின்று போகும். இருதயம் சில சமயம் நோயினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ படபடென்று அடித்துக்கொண்டால், களைப்பும் வலுக் குறைவும் உண்டாவதற்கு இதுவே காரணம். இவ்வாறே தசைகள், எலும்புகள், மூட்டுகள், நரம்புகள், சீரணக்

கருவிகள், கழிவுக் கருவிகள் முதலியவைகளுக்கும் இளைப்பாறுதல் அவசியம். துர்ப்பாக்கிய வசமாக, நம்மில் பலர் போதிய ஓய்வு இன்றி வாழ முயன்று, நோய் வாய்ப்படுகிறார்கள்.

நான்காவது உடற்பயிற்சி. வர வர நாம் மிகவும் சோம்பேறிகளாகிவிட்டோம். தெரு முனைக்குப் போவதற்குக் கூடப் பஸ்ஸில்தான் போகிறோம். ஒருவருக்கும் நடக்க விருப்பம் இல்லை. ஆண்டவன் நமது கால்களிலும் முதுகிலும் நீண்ட தசைநார்களை அமைத்திருக்கிறார். அவை வலிமை பெறுவதற்குப் போதிய வாய்ப்பு கிடைப்பது அவசியம். நடையும் ஆழ்ந்த மூச்சுப் பயிற்சியும் உடல் நலத்திற்கு முதன்மையான அமுத மருந்துகளாகும்.

ஐந்தாவது சஞ்சீவி உணவு. நாம் நலமுடன் இருப்பதற்கு என்னென்ன சத்துப் பொருட்கள் தேவை என்பதை மருந்துவர்களும் உடற்கூற்று வல்லுநர்களும் முயன்று கண்டுபிடித்திருக்கிறார்கள். நாம் ஒவ்வொருவரும் அதனை அறிந்து, நம் வீடுகளில் கடைப்பிடிக்க வேண்டும். நமது நாட்டிலே படித்தவர்களும் பணக்காரர்களும் கூடச் சத்துக் குறைந்த உணவு வகைகளையே உண்கிறார்கள். பச்சரிசி, மைதா மா, மணல் சர்க்கரை முதலிய பொருள்கள் விரைவில் செரிமானமாகக் கூடியவை என்பது சரிதான்; விரைவில் சக்தியும் கூடும் தரும் என்பது மெய்யே. ஆனால் அவற்றில் உடம்பின் ஊட்டத்திற்குத் தேவையான வைட்டமின் முதலிய சில சத்துகள் இல்லை. நாம் அவைகளை மட்டும் உண்டு வந்தால், நடுவயதுக்கு முன்னரே உடம்பு சீர்கெட்டுப் போகும். பகுத்தறிவு உணவு சாப்பிடுங்கள்; அதையும் களிப்புடன் அமைதியாக அருந்த வேண்டும். அப்பொழுது பலமும் அழகும் நீண்ட ஆயுளும் பெருகும்.

ஆறாவது நீர். நமது உடம்பில் முக்கால் பங்கு தண்ணீர். ஒவ்வொரு உயிரணுவுக்கும் அது தேவை. ஆதலால் அதை ஏராளமாகக் குடிக்க வேண்டும். கொதிக்க வைத்துக் குடிப்பது நலம். சிலர் சாப்பாட்டு வேளையில் இடையிடையே தண்ணீர் குடித்து, உணவை உள்ளே தள்ளிவிடுவார்கள். இது நல்ல பழக்கம் அன்று. நாள்தோறும் குளிர்ந்த தண்ணீரில் குளிப்பது மிக்க அவசியம்.

ஏழாவதாக, கடவுள் மீது நம்பிக்கை வைக்கவேண்டும். இதைக் கடைசியில் சொன்னாலும், இதுவே எல்லாவற்றிலும் முக்கியமான ஆரோக்கிய சாதனம். இறைவன் அருள் பழுத்தவர். நமது நோய்களை அவர் குணமாக்குவார். அவரால் முடியாத காரியம் ஒன்றும் இல்லை. அவரை நம்பவும், அவரிடத்தில் பக்தி செலுத்தவும் வேண்டும்.

— "நல்வழி"

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.

STATEMENT ABOUT OWNERSHIP AND OTHER PARTICULARS ABOUT NEWSPAPER "ARAMBAKALVI"

FORM IV

1.	Place of Publication	*Madras.*
2.	Periodicity of its Publication	*Monthly*
3.	Printer's Name Nationality Address	P. Veeraraghavan *Hindu* *94–95, New Street, G. T. Madras-1.*
4.	Publisher's Name Nationality Address	P. Veeraraghavan *Hindu* *94–95, New Street, G. T. Madras-1.*
5.	Editor's Name Nationality Address	P. Veeraraghavan *Hindu* *94-95, New Street, G. T. Madras-1.*
6.	Names and addresses of individuals who own the newspaper and Partners or Shareholders holding more than one percent of the total capital.	P. Veeraraghavan *94-95, New Street, G. T. Madras-1.*

I, P. Veeraraghavan, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

(Sd) P. VEERARAGHAVAN

Signature of Publisher,

"ARAMBA KALVI"